# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவராண்டு2030 மார்கழி 4ஞாயிற்றுக்கிழமை (19-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 19


# பெரும் குண்டுவெடிப்பில் சந்திரிகா தப்பினார்!

## பிரசாரக் கூட்டத்தில் பேசிவிட்டு அவர் புறப்பட்ட போது சம்பவம்

### 15பேர் மரணம்; 110 பேர் காயமுற்றனர்

கொழும்பு, டிசெம்பர் 19

**நேற்றிரவு 9.10 மணியளவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேசிய கூட்டத்தில் பெருங்குண்டு வெடிப்பு இடம்பெற்றது. அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்; அப்பகுதியிலிருந்த 15 பேர் உயிரிழந்தனர்; நூற்றிப்பத்துப் பேர் படுகாயமடைந்தனர்.**

ஜனாதிபதி குமாரதுங்க கொழும்பு நகர மண்டப திடலில் நடைபெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிவிட்டு இறங்கி நடந்துவந்து அருகில் நின்ற காரில் ஏற முற்பட்ட சமயம் அங்கிருந்து சுமார் முப்பது மீற்றர் தொலைவில் குண்டு வெடித்தது

அச்சமயம் ஜனாதிபதியைச் சூழ மெய்ப் பாதுகாவலர்களும் அமைச்சர்களும் பிரமுகர்களும் நின்றிருந்ததால் குண்டு வெடிப்பு அமுக்கம் ஜனாதிபதியைப் பாதிக்கவில்லை என்று தெரிவிக்கப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இடது புருவத்துக்கு மேல் ஜனாதிபதிக்கு சிறு காயம்

### மூன்று தையல்கள் போடப்பட்டன

குண்டுவெடிப்பில் ஜனாதிபதியின் இடது கண் புருவத்துக்கு மேல் சிறிய காயம் ஏற்பட்டது. நவலோக ஆஸ்பத்திரியில் அக்காயத்துக்கு மூன்று தையல்கள் போடப்பட்டன.

குண்டு வெடிப்பு அதிர்ச்சியால் (ஷொக்கால்) உடனடியாக ஜனாதிபதி பெரிதும் பாதிப்புற்றார் எனினும் அதன் பின்னர் நேற்றிரவு அவர் வழமை நிலைக்குத் திரும்பி ஆஸ்பத்திரியில் ஓய்வாக இருந்தார். நேற்று பின்னிரவு அவர் அலரி மாளிகைக்குத் திரும்பினார்.

நாட்டில் அமைதியையும் சட்டம், ஒழுங்கையும் பேணுமாறு தமது செயலர் பாலபட்ட பென்டி மூலம் நாட்டு மக்களை அவர் கேட்டுக் கொண்டார். (உ)

## பெண் ஒருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதல்?

### தலை கண்டுபிடிக்கப்பட்டது

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கூட்டத்தில் பெண் தற்கொலைத் தாக்குதல் நபர் ஒருவரே குண்டை வெடிக்க வைத்ததாகப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இத்தாக்குதலை நடத்திய பெண்ணின் தலை குண்டு வெடித்த பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சயனைட்டுடன் நடமாடிய ஒருவர் அப்பகுதியில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## கொழும்பு நகர டி.ஐ.ஜியும் குண்டுவெடிப்பில் பலி!

கொழும்பு, டிசெம்பர் 19

கொழும்பு நகரசபை மண்டபக் கூட்டத்தில் உயிரிழந்த 15 பேரில் கொழும்பு நகரப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் டீ. என். டி. சில்வாவும் புத்த பிக்கு ஒருவரும் பெண்களும் அடங்குவர்.

காயமடைந்த நூற்றுக்கும் அதிகமானோருக்கு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அவசர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (உ-5)

## தீவிரவாத சிங்கள அமைப்புக்கள் மீது சந்தேகம்

கொழும்பு, டிசெ. 19

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் கூட்டத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனப் பொலீஸார் கூறியுள்ள போதிலும் —

ஐ. தே. க. மற்றும் பொ. ஐ. முன்னணிக் கூட்டங்களில் நேற்றிரவு அனேகமாக ஒரே சமயத்தில் குண்டு வெடித்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அலவி, பீரிஸ், பௌஸி மற்றும் பலர் காயம்

கொழும்பு, டிசெ. 19

கொழும்பு நகர மண்டபக் குண்டு வெடிப்பில் அமைச்சர்கள் அலவி மௌலானா, ஜி. எல். பீரிஸ், பௌஸி உட்பட பல பிரமுகர்கள் காயமடைந்துள்ளனர்.

ஜி. எல். பீரிஸும் பௌஸியும் நேற்றிரவே அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டது

சம்பவம் நடைபெற்ற இடத்தில் அனுருத்த உட்பட மேலும் பல அமைச்சர்கள் இருந்த போதும் அவர்கள் காயமின்றித் தப்பிக் கொண்டனர். (உ)

## கொழும்பு, கம்பஹாவில் உடனடியாக ஊரடங்கு

கொழும்பு, டிசெ. 19

கொழும்பு நகர மண்டபப் பொதுக் கூட்டக் குண்டு வெடிப்பு மற்றும் ஜா எல பொதுக் கூட்ட கிரனேட் வீச்சுச் சம்பவங்களை அடுத்து கொழும்பு மாவட்டத்திலும், கம்பஹா மாவட்டத்திலும் உடனடியாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது அது எப்போது நீக்கப்படும் என்ற விவரம் நேற்றிரவு அறிவிக்கப்படவில்லை

தலைநகரிலும் சுற்றாடலிலும் அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறலாம் என்று கருதியே முன்னேற்பாடாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது குண்டு வெடிப்பின் பின்னர் பெரிய அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. (உ)

## ஜா-எலவில் அனர்த்தம்

# ஐ.தே.க.கூட்டத்திலும் பெரும்குண்டுவெடிப்பு

### ஜெனரல் அல்கம உட்பட 10பேர் பலி

கொழும்பு, டிசெ. 19

கொழும்பு நகர மண்டபப் பொதுக் கூட்டக் குண்டு வெடிப்புக்கு சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு முன்பதாக — நேற்றிரவு 8.55 மணியளவில் — எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஜா-எலவில் நடத்தப்பட்ட — ஐ.தே கட்சியின் பிரசாரக் கூட்டத்திலும் குண்டு வெடித்தது. அதில் இராணுவத்தின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரி ஜெனரல் லக்கி அல்கமவும் மற்றும் ஒன்பது பேரும் கொல்லப் பட்டனர்; ஐ.தே. கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியான ஜயலத் ஜயவர்த்தனா உட்பட 37 பேர் காயமடைந்தனர்.

அங்கு வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததா அல்லது கிரனேட் ஏதும் கூட்டத்தின் மத்தியில் வீசப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

ஜெயலத் ஜெயவர்த்தனா உட்பட காயமுற்ற அனைவரும் கொழும்பு றாகம ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த முன்னாள் இராணுவ அதிகாரியான ஜெனரல் லக்கி அல்கம அண்மைக்காலமாக ஐ தே. கட்சிக்குச் சார்பாகப் பிரசாரம் செய்து வந்தவர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பாடசாலைகளில் 29 மாணவர்களுக்கு 4 'ஏ'

கொழும்பு, டிசெ. 19

தற்போது வெளியாகியிருக்கும் ஜி. சீ. ஈ (உயர் தர) பரீட்சை பெறுபேறுகளின்படி குடா நாட்டுப் பாடசாலைகளில் 29 மாணவர்கள் நான்கு பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்றுள்ளனர்.

ஏற்கனவே நான்கு பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்ற — ஆறு பாடசாலைகளைச் சேர்ந்த — 22 மாணவரின் பெயர் விவரங்கள் நேற்றைய சஞ்சீவியில் பிரசுரமாகியிருந்தன.

நான்கு பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்ற எஞ்சிய ஏழு மாணவர்களும் அவர்களது பாடசாலைகளும் வருமாறு:-

**யூனியன்**

மகேந்திரராஜா பிரவீணன் (கணிதம்)

**நெல்லியடி ம. ம. வி.**

சிவபாலன் விஜிதா (கலை)

**வயாவிளான் ம. ம. வி.**

சண்முகம் இராமநாதன் (வர்த்தகம்)

**மகாஜனா**

கந்தசாமி அனுஷியன் (கணிதம்)

**யாழ். சென்றல்**

சேந்தன் மாதவன் (கணிதம்), சந்திரமோகனதாஸ் சதீஸ்மோகன் (வர்த்தகம்)

**உடுவில் மகளிர்**

நடராசா அபிராமி (கணி

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகா, ரணிலுக்கு வாக்களிப்பது பிரபாவின் வெற்றிக்கே வழிவகுக்கும்

## ஜே. வி. பி. செயலாளர் கூறுகிறார்

கொழும்பு டிசெ. 19 எதிர்வரும் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவுக்கோ ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அளிக்கும் வாக்குகள் பிரபாகரனின் வெற்றியை ஊர்ஜிதப்படுத்தும்.

இவ்வாறு ஜனதா விமுக்தி பெரமுனையின் பொதுச் செயலாளர் நாயகம் டில்வின் டி. சில்வா பேருவளையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நமது நாடு சுதந்திரமடைந்து 51 வருடங்கள் ஆகிவிட்டன. இந்த நாட்டை இரு பேரினவாத கட்சிகளும் பல முறை ஆண்டு வந்தன. சுதந்திரமாக நாட்டை துண்டுபோடுகிறார்கள். நாட்டின் அபிவிருத்திக்காக சந்திரிகா, ரணில் இருவரும் பேசுவது கிடையாது. இவர்களுடைய பிரச்சாரக் கூட்டங்களில் பிரபாகரனைப் பற்றித்தான் பேசுகிறார்கள். அது தவிர இந் நாட்டில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களைப் பற்றி பேசுவதே கிடையாது. ஆனால் ஜனதா விமுக்தி பெரமுனை மட்டும் தான் தமிழ், சிங்கள முஸ்லிம் மக்களைப் பற்றிப் பேசுகின்றது — என்று அவர் மேலும் கூறினார். (க-இ)

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 06 — 1922

மறைவு: 19 — 11 — 1999

திருமதி

**சோதிநாதன் மகேஸ்வரி**

திதி: 19 – 12 – 1999

அன்பாய்ப் பண்பாய் பழகிய ஆருயிர் அம்மாவே!
உங்கள் பிரிவால் எம் இல்லம் களையிழந்ததுவே!
உன்பால் வைத்த அன்பால் நாம் துடியாய்த்
துடிக்கின்றோம்!
எமை விட்டுப் பிரிந்து எங்குதான் சென்றீர் தாயே!
உங்கள் ஆத்மா இறைவன் பாதகமலங்களில் சேர்ந்து
இன்புற்றிருக்க நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

3 ஆம் கட்டை,
கல்வியங்காடு.

(71894)

---

### சமயசந்நிதிகளில்

அரியாலை. டிசெ. 19

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவை உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தினமும் காலை 5 மணிக்கு விஷேட அபிஷேகத்துடன் நடைபெற்று வருகின்றது. (ஐ-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 19

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் ஆலயத்தின் சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.15 மணிக்கு சுப்பிரபாதத்துடன் ஆரம்பமாகும்.

காலை 6.30 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனமும் காலை 10.30 மணிக்கு ஏகாதசி உற்சவமும் இடம் பெறவுள்ளன. நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு துவாதசி உற்சவம் இடம்பெற்று சுவாமி வெளி வீதி வலம் வருவார். (க)

---

## மரண அறிவித்தல்கள்

### சிவானந்தக்குருக்கள் சிவசுப்பிரமணியசர்மா

சங்கானை இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த சிவானந்தக்குருக்கள் சிவசுப்பிரமணியசர்மா வவுனியாவில் நேற்று (18-12-99) இறைபதம் எய்திவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் இன்று (19-12-99) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

தகவல்:
சோ. கேதீஸ்வரசர்மா
(பேறாமகன்)

நல்லூர் தெற்கு,
கற்பக விநாயகர் கோயில்,
கச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.

(71887)

### சிவசுப்பிரமணியம் சிவகுமார் (ஆசிரியர்)

[யா/தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை]

இணுவில் மேற்கைச் சேர்ந்தவரும் தாவடி இந்து தமிழ்க் கலவன்பாடசாலை ஆசிரியருமான சிவசுப்பிரமணியம் சிவகுமார் காலமானார்

அன்னார் சந்திராதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆச்சிமுத்து தம்பதிகளின் மகனும் கந்தையா இரத்தினம்மா [ஓவசியர்] அவர்களின் மருமகனும் கிருசாந்தி [யாழ். பல்கலைக் கழகம்—வர்த்தகபீடம்], சிவரூபன் [கொக்குவில் இந்துக் கல்லூரி—மாணவன்], நிலானி [வேம்படி மகளிர் கல்லூரி—மாணவி] ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசலிங்கம் [ஓய்வுபெற்ற O.A.T. கொக்குவில் கட்டடத் திணைக்களம்], யோகலிங்கம் [ஆசிரியர்—கொழும்பு], ராஜேஸ்வரி, சாவித்திரிதேவி, தனபாக்கியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-12-99) ஞாயிற்றுக்கிழமை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க. கணேசலிங்கம்
(மைத்துனர்)

"தனபதி"
இணுவில் மேற்கு,
இணுவில்.

(71893)

### திருமதி எமிலி தங்கமலர் ஞானப்பிரகாசம்

கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் 5 ஆம் குறுக்குத் தெருவை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி எமிலி தங்கமலர் ஞானப்பிரகாசம் அவர்கள் நேற்று (18-12-1999) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அ. ஞானப்பிரகாசம் (P.W.D ஓவசியர்) அவர்களின் பாசம்மிகு துணைவியும், திரு. குலேந்திரன் (கொழும்பு), திரு. மகேந்திரன் (U K), வண பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் (அதிபர், யா/புனித கென்றியரசர் கல்லூரி இளவாலை), Dr. நவநீலன் (கனடா) திருமதி (ஜொய்சி) சுவாம்பிள்ளை (U K), திருமதி ஜனற் அலோசியஸ் (U.K). திருமதி ஜோவிதாசெல்வராஜா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19-12-1999) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட்திரு ஜஸ்ரின் பே. ஞானப்பிரகாசம்
(மகன்)

யா/புனித கென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

(71889)

---

## மரண அறிவித்தல்கள்

### இராசேந்திரம் எலிசபேத்தம்மா

பாடசாலை வீதி, நாவற்குழியை பிறப்பிடமாகக் கொண்ட இராசேந்திரம் — எலிசபேத்தம்மா நேற்று (18-12-99) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் இம்மானுவேல் (ஓய்வுபெற்ற பணியாளர், புகையிரதத் திணைக்களம்), மேரி மாக்கிறேற், செல்வராக்கினி, சிசிலியம்மா, மரியரஞ்சிதம், அஞ்சலினா, ஞானசோதி அருள்நேசன் (லண்டன்), குணசீலன் (சுவீஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாக்கியநாதர், திருச்செல்வம் மற்றும் யாக்கோப்பு ஆரோக்கியநாதர், அன்றன், ஸ்ரீபன், ஆன் வசந்தி, மேரி லூட்ஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19-12-99) ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயத்தில் பி.ப. 2 மணியளவில் இரங்கல் திருப்பலி நடைபெற்று நாவற்குழி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A. ஸ்ரீபன்
(மருமகன்)

பாடசாலை வீதி,
நாவற்குழி

(71895)

### வின்சன்டிபோல் யோசப்

(உரிமையாளர் V Joseph & Bro Dam Street Colombo.)

சில்லாலையைச் சேர்ந்த வின்சன்டிபோல் யோசப் நேற்று முன்தினம் 17 — 12 — 99 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வின்சன்டிபோல், றோசமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் ஹில்டாவின் அன்புக் கணவரும் சேர்ளி மேவின், லின் சிங்கராயர், காலஞ்சென்ற லிசி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருட் சகோதரி யோசப்பின் (செபமாலை கன்னியர் சபை அச்சுவேலி), அருட் சகோதரி பெற்றோனில்லா (திருக்குடும்ப கன்னியர் ஆர்க் உடுவில்) காலஞ்சென்ற கிறேஸ் அருளானந்தம் ஆசிரியை, அருட் சகோதரி நிசெற்றா (திருக்குடும்பம் புதுக்குடியிருப்பு), போல் சாமிநாதர், மறிஸ்ரெலா, செல்வராசா, அலோசியா ஆகியோரின் பாசமுள்ள சகோதரரும் மேவின் கொன்ய்ரன்ரன், சிங்கராயர் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (19-12-99 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு றேமன்ஸ் மலர்ச்சாலையில் இருந்து கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அன்ரன் செல்வராசா
(மைத்துனர்)

124, ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு.

(71892)

---

**நாகம்ஸ்**
சுன்னாகம்
ரஜனி ரோஜா
நடித்த
**உழைப்பாளி**
காட்சிகள்:
11-00, 2-30,
(புதிய நேரம்)
(71888)

**ராஜா**
யாழ்ப்பாணம்
விஜய் ● ஷாலினி
மற்றும் பலர் நடித்த
**காதலுக்கு மரியாதை**
10-30, 2-00, 5-00,
(இ/10223)

**லிபேட்டி** அச்சுவேலி
பிரபுதேவா, சிம்ரன்
நடித்த
★ **டைம்**
[புதிய வெளியீடு]
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070-212678
(71687)

---

## கண்ணீர் அஞ்சலி

யா/ புனித கென்றியரசா கல்லூரி அதிபர்
வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
அளர்களின் அன்புத்தாயார்.

திருமதி.

**எமிலி தங்கமலர் ஞானப்பிரகாசம்**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—அழகு நிலா தொலைத் தொடர்பகம்
A. J. K. AUDIO, இளவாலை

(71890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிடச் சூழலில் வளரும் அரங்கக்கலை

## லண்டன் அவைக்காற்றுக் கழக நாடக விழா தந்த அனுபவம்

**லண்டனிலிருந்து**
**சுதா**

புகலிடச் சூழலில் முதியோர்கள் சந்தித்து உரையாடுவதற்கும் அவர்களுக்குரிய சில தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் லண்டன் தமிழ் நிலைய - முதியோர் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. இவர்களுக்கு நாடகம் தயாரித்து மேடையேற்றுவதென்பது ஓர் உற்சாகமான நடவடிக்கை. புகலிடங்களில் பல முதியோருக்கு அவசரச் சூழல் காரணமாக, பேச்சுத் துணைக்காக பிள்ளைகளோ, பேரப்பிள்ளைகளோ கிடைப்பதில்லை. தனிமையில் ஏங்கும் முதியோர் ஏராளம். இந்த வகையில் இம் முதியோர் இல்லத்தின் பணி மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.

அரங்கம், சிறுவர்கள், முதியோர்கள், இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரை ஒன்றாக கொண்டுவரும் பரஸ்பர புரிந்துணர்வு, கூட்டாகச் செயலாற்றும் பாங்குபோன்ற நல்ல அம்சங்களை வழங்கிறது. இதனால் வாழ்க்கையில் ஒரு பிடிப்பும் ஈடுபாடும் ஏற்படுகிறது. விரக்தியுற்று பலர் அரங்கச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் கூடியளவு வாழ்வியலை புரிந்து கொண்டு புதிய வாழ்க்கையை ஏற்படுத்துகிறார்கள். சிறுவர்களுக்கும் அரங்கம் இது போன்ற அம்சங்களோடு தலைமைத்துவம், ஆளுமை போன்ற நல்ல அம்சங்களையும் வழங்குகிறது.

சிறுவர் நாடகங்கள் பலவற்றை தயாரித்த தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் முதியோர் நிலைய நிதிக்காக தமது நாடகங்களோடு முதியோர் தயாரித்த 'கண்ணன் எங்கே?' நாடகத்தையும் நாடக விழாவில் இணைத்துக் கொண்டுள்ளமை பலராலும் தற்போது பேசப்படுகிறது.

மேற்படி நாடக விழா கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணி முதல் லண்டன் றைசிலிப் (Ruislip) என்னும் பகுதியில் அமைந்துள்ள வின்ஸ்ரன் சேர்ச்சில் மண்டபத்தில் (Winston Churchill Hall) மிகவும் சிறப்பாக நடந்தேறியது. இந்த நாடகவிழாவில் 'கண்ணன் எங்கே' என்ற தாளலய நாடகமும் சம்பந்தம், மழை, பிரத்தியேகக் காட்சி என்ற மூன்று நாடகங்களும், (டயலோக்) Duologue என்ற அரங்க நிகழ்வும் — மேடையை அலங்கரித்தன.

திருமதி குணா வேலுப்பிள்ளை அவர்களின் நெறியாள்கையில் லண்டன் முதியோர் நிலையம்வழங்கிய 'கண்ணன் எங்கே' என்ற தாளலய நாடகம் முதலில் அரங்கிற்கு வந்தது.

18 முதியோர்கள் இணைந்து ஆடிப்பாடி இடையிடையே நகைச்சுவை சொட்ட வழங்கிய இந்த நாடகம் மிகவும் சிறப்பாக இருந்தது. ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதுதான் சுகம்... என்கிறது ஒரு பாடல். ஆனால் இந்த நாடகத்தைக் கண்ணுற்றவர்கள் ஆடல், பாடல் ஆகியவற்றுடன் சேர்ந்த நல்ல கதையம்சம் நிறைந்த நாடகத்தைப் பார்த்து ரசித்த சுகத்தைப் பெற்றனர். இதுவும் ஒரு மனச்சுகம் தான். இதில் சிறப்பு என்னவென்றால் ஆடிப்பாடி நடித்தவர்கள் மழலைகளல்லர்; இளைஞர்களல்லர்; தள்ளாடும் வயதை நெருங்கும் முதியோர்கள் என்பதுதான். உண்மையிலேயே இந்த நாடகம் வித்தியாசமான ஒரு ரசிப்புணர்ச்சியை நிலைநிறுத்தியது. சிந்தனைச் சிதறல்களைத் தூண்டியது. கோபாலன், தாய் வள்ளியம்மை, கண்ணன், பார்வதி, ருக்மணி, ராதை ஆசிரியர், சாமியார் வேடங்களில் வந்த பாத்திரங்களும், மாணவர்களாக வகுப்பறைக்கு வந்த 10 பாத்திரங்களும் தங்களால் முடிந்தவரை சிறப்பாக நடித்தனர். இதில் வகுப்பறைக் காட்சிகள் நகைச்சுவை நிறைந்ததாய் இருந்தன. இந்த நாடகம் பக்திமயமான நாடகமாகவும் காணப்பட்டது. முதியோர்களை ஒருங்கிணைத்து இந்நாடகத்தை வழங்கிய நெறியாளரும்மற்றும் அதற்கு ஆலோசனை வழங்கிய சண்முகம் ஐயா அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அடுத்து க பாலேந்திரா அவர்களின் நெறியாள்கையில் அவைக்காற்று கலைக் கழகத்தினரின் 'சம்பந்தம்' என்ற நாடகம் அரங்கேறியது-நிலவுடமை சமுதாயத்தில்வறட்டுக் கௌரவமும், 'நான்' என்ற ஆணவமும் சம்மந்தப் பேச்சில் காணித் தகராறு, மாட்டுத்தகராறு என்று பூதாகாரமாகக் கிளம்பி சமமந்தத்தை கெடுத்துவிடுகிறது. நகைச்சுவையான உரையாடலால் ஆக்கப்பட்டிருக்கும் இந்த நாடகம் ஆழ்ந்த சிந்தனைக்கும் உரியது. அன்ரன் செக்கோவ் ரஷ்ய மொழியில் எழுதிய நாடகத்தை தமிழ் சூழலுக்கு மிகவும் பொருத்தமாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. கிராமிய மொழி வழக்கில் அமைந்த உரையாடல்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் 'ஆங்கிலத் தமிழ்' பேசும் பலரை ஊருக்குக் கொண்டுபோய் விடுகிறது. நடிப்பு முறையும், நாடகத்தின் வேகமும் கருவுக்கு ஏற்ற லயத்தில் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. நடேசுவாக மனோ மனுவேற்பிள்ளையின் பாத்திர உருவாக்கம் முருகேசுவாக சி. சாந்தகுணம் யாழ்ப்பாணத்து கிராமிய மொழியைக் கையாளும் விதமும் கோமளமாக ஆனந்தராணியின் நடிப்பும் அரங்கத்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகாந்தி
## உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## அமைதி தேடி அலையும் மனிதா எங்கே ஓடுவாய்?

**அருட்தந்தை**
**அ. பிரான்சிஸ்**
**லொசிங்டன் அ.ம.தி.**

எல்லோரும் ஓடுகிறோம்! ஏன்...? எங்கே ...? கடந்த வாரம் முழுவதும் யாழ். குடாநாடு எங்கும் 'ஓட வேண்டி வரும் போல'' என்ற பதம் ''நீங்கள் எங்க போவதாக யோசனை?'' என்ற வினா ''எவ்வளவிற்கு என்று ஒடுவது... ''என்னுமா ஓட வேணும்'' ''நாங்கள் எங்க போறது?'' என்ற வார்த்தைப் பரிமாற்றங்கள் பரவலாக பரிமாறப்பட்டன. இன்றுமட்டுமல்ல இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்னும் இத்தகைய ஓட்டம், புலம் பெயர்வு நடந்ததாக வரலாறு கூறுகிறது.

அன்றொரு நாள் அன்னை மரியாளும் தாதை சூசையும் தமது இல்லிடத்தைவிட்டு இடம் பெயர்ந்தனர் (லூக் 2; 1-8) ஏன் ...? தமது உரிமையை நிலை நிறுத்த. குடியுரிமையை தாமும் யூதேயா நாட்டு குடிமக்கள் என்பதை உறுதிப்படுத்த ஓடினர். அனைத்துலகிற்கும் குடியுரிமை வழங்குகின்றவரை அன்னை வயிற்றில் சுமந்த நிலையில் நடந்த இடம் பெயர்வு அது ஒன்றுமட்டுமா? மீண்டும் ஓர் இடம் பெயர்வு அவர்களுக்கு எதற்காக? அமைதிக்காக, விடுதலைக்காய் வாழ்வை காக்க உயிரை கையில்பிடித்த படி (ஏரோது 2 வயது குழந்தைகளைகொலைசெய்ய கட்டளை பிறப்பித்த போது) யார்? அதே ஆள்கள் அன்னை மரியாளும், பத்தா சூசையும் (மத். 2:13-15) எப்படி ஓடினர்? நிலையான அமைதியை நிரந்தர விடுதலையை,உயிர்ப்பிச்சை கொடுக்கும் உயிரின் ஊற்றையே கரமேந்தி தங்களினுள் அவ்வமைதியை தக்கவைக்க- நிலைநிறுத்த— அதனைப் பாதுகாக்க—முயற்சிப்பதனால் பலருக்கு அமைதியும், மீட்பும் விடுதலையும், நிம்மதியும், உயிர்காப்பும் கிடைக்குமெனத் தெரிந்தவர்கள் ஓடினர். அன்று அவர்கள் எடுத்த முயற்சியினால் உயிரைக்காக்க ஓடி புலம் பெயர்ந்ததினால் கிடைத்த அமைதியையும், சமாதானத்தையும், விடுதலையையும் நாம் முழுமையாக அனுபவிக்க முயற்சித்தோமா இல்லை.

அவருடைய மனிதாவதாரத்தால் மனுக்குலத்திற்கு நிலையாகக் கிடைத்த அமைதியை சமாதானத்தை உரிய முறையில் தகுந்தஆயத்தத்துடன் அதைப்பெற்றுச் சுவைக்க தவறியதனால் சமாதானத்தை, அமைதியை தொலைத்தவர்களாக இருக்கின்றோம். இன்றும் தொடர்ந்து அவற்றை நாம் தேட வேண்டியவர்களாக — அவற்றுக்காக ஓடி புலம் பெயர்ந்து திரிய வேண்டியவர்களாக — இருக்கின்றோம். ஏனெனில் சரியாக நாம் அதை இனங்கண்டு முழுமையாக ஏற்றுக்கொள்ள தவறிவிட்டோம். இங்ஙனம் அந்த நிலையான விடுதலையை, அமைதியை. சமாதானத்தை நாம் தவற விடாமல் பாதுகாக்க எமக்கு உரிய, முன்னெச்சரிக்கையும், அறிவுறுத்தலும் கொடுக்கப்பட்டும் நாம் அதைப் பயன் படுத்திப்பலன் பெறவில்லை. முன்னெச்சரிக்கையாக......? அறிவுறுத்தலா...? எமக்கா ......? எங்கே ......? எப்போ...... ??? கொடுக்கப்பட்டது? ஆம் நிச்சயமாக கொடுக்கப்பட்டது இதற்காகத்தான் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கானகத்தில் ஒரு குரல் ஒலித்தது, இல்லை அழைத்தது!

எமை அழைத்த அக்குரல் சொல்லிய செய்தி என்ன வென்றால் மனமாற்றம், பாதையை செம்மைபடுத்தல், இதய சுத்தியுடன் புதுவாழ்விற்குள் நுழைய அதன் பலன்களை அனுபவிக்க தயாராகுங்கள் என்பதுதான். ஆனால் நாம் அக்குரலுக்கு செவிமடுக்கத் தவறிவிட்டோம். அன்று மட்டுமென்ன, இன்றும் தான் எம் கானகத்தில் சத்தம் கேட்கிறது. அச்சத்தம் எம்மை அழைக்கிறது! ஓயாது குமுறி முழங்கி கொண்டிருக்கும் இச்சத்தம் எதற்கு எம்மை அழைகின்றது, அமைதிக்காக, சமாதானத்திற்காக, எம் உள்ளங்களைச் சுத்திகரிக்க,இறக்க, அகிம்சை வழியில் ஆன்மீக பலம்பெற்று அமைதியின் அரசரின் வழியைப்பின்பற்றி வாழ பிறருக்குப்பகிர்ந்துகொடுக்க, கூவி முழங்கி எமக்கு இடித்துரைக்கும் செய்தியாக அழைக்கிறது. சமத்துவத்துடன் கூடிய உரிமை வாழ்வை எல்லோருடனும் பகிர்வதன் சமாதான முயற்சிகளை, சமூக அணுகுமுறைகளை நாடுவதன் அவசியத்தை உணர்த்தும் ஒலியாகும்.

### ஞாயிறு நற்பிரசாதம்

ஆகவே காலம் தாழ்த்தாது வன்முறைகள் களைய நீதி, சுதந்திரம் நிலைத்திட எம்மிடையே அவதரித்த ஆண்டவன் தரும் அமைதியை, சமாதானத்தை எல்லோரும் பெற விரும்புவோம், முயற்சிப்போம். செயற்படுவோம். அன்று 2000 ஆம் ஆண்டின் முன் இயேசு பிறப்பில் ''பேரொளியைக் கண்டோம்'' ''மரணநிழல் எம்மை விட்டுநீங்கியது ''(இசை.9:2) என மக்கள் அகமகிழ்ந்தனர். இன்று 2000 ஆம் ஆண்டின் பின் கிறிஸ்து பிறப்பு விழாவில் ''பேரொளியைக்'' கேட்டோம்'' மரண நிழல் எம்மை கவ்விக் கொள்கிறது'' என நாம் திகிலுறாமல் அமைதியின் அரசராம் இயேசுவை எம் உள்ளங்களில் வரவேற்கும்போது அனைத்து ஆபத்துக்களும் எம்மைவிட்டு அகலும். அதன் பயனாக அமைதியாய் அவர் பிறப்பை எம்மில் உணர— அதைக்கொண்டாட [illegible] வோம்.

## வாக்குகள் பிளவுபடும் தெற்கு நிலைமை

**-சி. பா. சு.பிள்ளை-**

சோதிடர்களின் கணிப்பை நம்பி ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் துணிந்தார்கள், இன்று இடம்பெற்று வரும் தொடர் நிகழ்ச்சிகளினால் துணுக்குற்றுள்ளனர் எனப் பரவலாகச் செய்தி அடிபடுகிறது. தை மாதம் வியாழ பகவான் வக்கர கதியிலிருந்து நீங்கி நேர்கதியில் செல்லவுள்ளார். அதன் பின்பு தேர்தலை நடத்தினால் ஆளும்கட்சிக்குச் சாதகமாக அமையாது என்று ஆருடம் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் திடீர் மறைவு, வன்னியில் படையினருக்கு ஏற்பட்ட திடீர் பின்னடைவு ஆகியவை முக்கியமாக அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

படையினரின் முன்னேற்றத்தைக் காட்டி வாக்கு வேட்டையாட முடியாத நிலை ஒரு பக்கம். தொண்டமானின் மறைவின் பின் மலையகத்தில், மலையக முன்னணி பிளவுபட்டு விட்டது. மலையக வாக்காளர்களின் வாக்குகள் யாருக்குக் கிடைக்கும் என்பது நிச்சயமற்றதாகி விட்டது. சில தலைவர்கள் பகிரங்கமாகவே ஐ.தே.க. வுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். ஆறுமுகம் தொண்டமானுக்கு மக்களிடையே எவ்வளவு செல்வாக்கு உள்ளது என்பது தெளிவற்றதாகவே உள்ளது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முக்கிய தூண் போன்று விளங்கிய திரு. செல்லச்சாமியின் சாயம் தொண்டமான் இருந்தபோது சிறிது வெளுத்திருந்தாலும், அவருடைய செல்வாக்குத் திரும்பவும் இப்போது அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. அவருடைய ஆதரவு ஆளும் கட்சிக்குக் கிடைக்குமா என்பது சந்தேகத்துக்குரியது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அதிக வேட்பாளர்கள் குதித்துள்ளனர். இவர்களில் பலர் வாக்குகளைப் பிரிக்கக் கூடியவர்கள

ஜே.வி.பிக்குத் தென்பகுதியில் கணிசமான செல்வாக்கு உள்ளது இது கடந்த காலத் தேர்தல்களில நிரூபணமாகி உள்ளது. ஆகவே இததேர்தலில் இவர்களுக்கு கணிசமான வாக்குகள் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த வாக்கு வங்கியிலுள்ளவை. கடந்த காலங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கே கிடைத்தன. ஆகவே இது பாரிய விளைவை ஏற்படுத்தும்.

### செய்தி மடல்

வாசுதேவ நாணயக்கார இடதுசாரிக் கொள்கையுடையவர்களிடையே செல்வாக்குள்ளவர். இவருக்குக் கணிசமான வாக்குகள் கிடைக்க வாய்ப்புண்டு இந்த வாக்குகளும் கடந்த காலங்களில் பொதுமக்கள் முன்னணிக்குக் கிடைத்தவையே. ஆகவே இவரும் பொதுமக்கள் முன்னணியின் வாககுகளையே பிரிக்கப்போகிறார்

கொழும்பிலுள்ள தமிழர்கள் கடந்த காலங்களில பலவித இன்னல்களுக்கு ஆளாகி வந்துள்ளனர். கடந்த 19 4 பொதுத் தேர்தலின்போது இவர்கள் பொதுமக்கள் முன்னணிப் பக்கமேபெரும்பாலும் சாய்ந்து நிற்கின்றனர் என்பது பொதுவான அபிப்பிராயம் ஆனால் இமமுறை மறுபக்கம சாயக்கூடிய சாத்தியக் கூறுகள் நிலவுகின்றன.

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முறைகேடுகளுக்கு எதிராகக் கடும்நடவடிக்கை

## பொலீஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

செவ்வாயன்று நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர்த லின்போது ஊழல் முறைகேடு களில் ஈடுபடுவோர் மீதும் அவற்றுக்கு உடந்தையாக இருக்கும் பொலீஸ் அதிகாரி கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் உட னடியாகவே கைது செய்யப் படுவார்கள் என்று பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்து வக்கு தெரிவித்துள்ளார்.

கடமையைச் செய்யத் தவ றும் பொலீஸார் பற்றி தன் னிடமோ அல்லது தேர்தல் ஆணையாளரிடமோ உடன் தெரியப்படுத்தும்படியும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிகளின் அய லில் ஆயுதங்களுடன் காணப் படுபவர்களை உடனடியாக கைது செய்யுமாறு உத்தர விடப்பட்டிருப்பதாகவும்—

நடமாடும் பொலீஸ் பிரிவு கள் மூலம் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரமாக்கு மாறும்—

சகல பொலீஸ் பிரிவுகளுக் கும் பணிக்கப்பட்டிருப்பதாக வும் அவர் மேலும் தெரிவித் தார்.

(ஐ-சி)

## அரியாலை கிழக்கில் திருட்டுக்கள் அதிகரிப்பு

அரியாலை கிழக்கு, மேற் குப் பகுதிகளில் கடந்த சனிக் கிழமை பல வீடுகளில் திருட்டுக்கள் இடம்பெற்றுள் ளன.

அரியாலை செம்மணி வீதி யில் உள்ள ஒரு வீட்டில் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதி யான தாலிக்கொடி திருடப் பட்டுள்ளது.

சுப்பிரமணியம் வீதியில் உள்ள மற்றொரு வீட்டில் 7 ஆயிரம் ரூபா பணம் உட் பட பெறுமதியான சேலை கள் மற்றும் துணிவகைகளும் களவாடப்பட்டுள்ளன.

சுப்பிரமணியம் வீதியில் உள்ள வீட்டில் திருடர்கள் ஓடு பிரித்து இறங்கும் போது வீட்டுக்காரர் கூக்குரல் இட் டதைத் தொடர்ந்து தப்பி ஓடிவிட்டனர்.

இந்தப் பகுதியில் உள்ள மக் கள் இரவுவேளைகளை பீதி யுடன் கழித்து வருகின்றனர்.

[ஐ-86-17]

### வலிகாமம் கிழக்குப் பகுதியில்

## சனசமூக நிலையங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

வலி.கிழக்கு, டிசெ. 19

ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் வலி காமம் கிழக்கு பிரதேச சபைக்கு 9 லட்ச ரூபா நிதி சனசமூக நிலையங்கள் புனர மைப்புக்கென ஒதுக்கப்பட் டுள்ளது.

இருபாலையில் புதிய சிறு வர் பூங்கா, கல்வியங்காடு முழுமதி சனசமூக நிலையம், அச்சுவேலி பொது விளை யாட்டு மைதானம், புத்தூர் சரஸ்வதி பாலர் பாடசாலை, உரும்பிராய் யோகபுரம் அண்ணா சனசமூகநிலையம், நீர்வேலி சிவசக்தி சனசமூக நிலையம், வளலாய் கலைக் கதிர் சனசமூக நிலையம், அச்சுவேலி கதிரொளி சன சமூக நிலையம், அச்சுவேலி அன்னை திரேசா பாலர் பாட சாலை, பத்தமேனி முர சொலி சனசமூக நிலையம், பத்தமேனி ஞானவைரவர் சனசமூக நிலையம், நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலை யம், சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையம் ஆவரங் கால் கலையகம் பாலர் பாட சாலை, புத்தூர் வளர்மதி சன சமூக நிலையம் ஆகியன இந்த நிதி மூலம் புனரமைக் கப்பட உள்ளன.

புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கான பூர் வாங்க ஏற்பாடுகள் நடை பெற்று வருவதாக பிரதேச சபையின் செயலாளர் தெரி வித்தார்.

(ஐ-180)

## 75 பேருக்கு கொடுப்பனவு

வலிமேற்கு, டிசெ 19

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள அராலி தெற்கு அராலிகிழக்கு ஆகிய இரண்டு கிராம உத்தியோகத் தர்கள் பிரிவிலும் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை யினால் ''ஜனஉதான'' வீட மைப்புத்திட்டத்தின் கீழ் 75 பேருக்கு முதலாம்கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இந்த வீடமைப்புத்திட்டத் தின் கீழ் ஒவ்வொரு பயனா ளிக்கும் வடக்கின் மீள்குடி யேற்ற புனரமைப்பு அதிகார சபையினரால் 25 ஆயிரம் ரூபா நன் கொடையாகவும்—

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதி கார சபையினரால் 20 ஆயி ரம் ரூபா கடனாகவும் 10 ஆயி ரம் ரூபா நன் கொடையாக வும் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பயனாளிக்கும் ''ஜன உதான'' திட்டத்தின் கீழ் புதிய வீடுகளை அமைப் பதற்கு 55 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

(ஐ-175)

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் பதிவு இலக் கங்கள் உதயனில் வெளிவரு வது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 16 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செய லக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(125153ஏ), 125153பி), [125153பி], (125448ஏ), (127013ஏ), [127138ஏ], [127138பி), [127153ஏ], [127153பி), (127219ஏ), (134417ஏ), [134417பி), (134417சி), [134427ஏ], [134462ஏ], (134462பி), (134582ஏ).

**யாழ்ப்பாணம்**

(124875ஏ), [120378ஏ), (120378பி), (122415ஏ), (122688ஏ), (122688பி), [122688சி], [122688டி], (124648ஏ), (126642ஏ), [126934ஏ], (126934பி), (126934சி), [126934டி], [133434ஏ], [133446ஏ], (133450ஏ), (133495ஏ), 133503ஏ), (133503பி) [133503சி], [133508ஏ], [133626ஏ], [133659ஏ], [133664ஏ].

**கோப்பாய்**

[104189ஏ], [104189பி], [122952ஏ], [122952பி], [123114ஏ], [123158ஏ], [123158பி], [123719ஏ], [124025ஏ], [124032ஏ], [124033ஏ], [124052ஏ], [124052பி], [124216ஏ], (133109ஏ), (133109பி), (133109சி), [133109டி], (133114ஏ), (133115ஏ), (133116ஏ), (133116பி), (133129ஏ), (133130ஏ), (133136ஏ), (133136பி), (133137பி), (133137சி), (133138ஏ), (133145ஏ), (133145பி), (133145சி), (133145டி], (133147ஏ), (133154ஏ), (133154பி), (133155ஏ), (133156ஏ), [133156பி], (133156சி), (133158ஏ), (133158பி), (133164ஏ), (133164பி), (133170ஏ), (133170பி), (133175ஏ), (133175பி).

**நல்லூர்**

(110211ஏ), (122934ஏ), (124218ஏ), (124219ஏ), (124221ஏ), (124252ஏ), (124333ஏ), (124334ஏ), (124385ஏ), (124382ஏ), (124440ஏ), (124447ஏ), (124448ஏ), (133037ஏ), 133037பி), (133037சி), [133042ஏ], [133150ஏ], [133153ஏ], [133153பி], [133160ஏ], [133173ஏ], [133173பி], [125263ஏ], [125263பி], [125263சி], [125331ஏ], [125331பி], [127182ஏ], [127190ஏ], [127208ஏ], [127208பி], [127208சி], [127451ஏ], [127451பி], [127491ஏ], [127491பி], [134504ஏ].

**பருத்தித்துறை**

124392ஏ], [132725ஏ], [132725பி], [132725சி], [132725டி], [132725ஈ].

**சண்டிலிப்பாய்**

[125086ஏ], [125159ஏ], [127035ஏ], [127035பி], [127035சி], [127035டி], [127124ஏ], [127126ஏ], [127161ஏ], [127161பி], [127161சி], [127195ஏ], [127195பி], [127195சி], [127272ஏ], [127285ஏ], [127285பி], [127292ஏ], (127292பி), (127409ஏ), (127409பி), (127409சி), (127409டி), (134567ஏ), (134567பி), (134567சி).

**தெல்லிப்பழை**

(133868ஏ), (133868பி), (125150ஏ), (125150பி), (125200ஏ), (127221ஏ).

**உடுவில்**

(121262ஏ), (121262பி), (127272ஏ), (127272பி), (127272சி), [127272டி], (127272ஈ), (127272எவ்), (123822ஏ), [123822பி), (123822சி), (123822டி), (123822ஈ), (123822எவ்), (123822ஜி], (123852ஏ], (127139ஏ), (127139பி), [127139சி], [127176ஏ], (127198ஏ), (127228ஏ), (127249ஏ), (134401ஏ), [134447ஏ), (134447பி[, (134461ஏ], (134466ஏ], (134466பி), [134473ஏ].

# வாழ்க்கையை சமூகத்திற்குப் பயனுள்ளதாக்க ஒவ்வொருவரும் உழைப்பதே பெரிய சிறப்பாகும்

## பாராட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், டிசெ. 19

சட்டத்தரணி கனகரத் தினம் தமது வாழ்க்கையை சமூகத்துக்கு பயனுள்ளதாக அமைத்தார். அவரது வழி காட்டலைப் பின்பற்றி ஒவ் வொருவரும் தமது வாழ்க் கையை சமூகத்துக்கு பயனுள் ளதாக அமையும் வகையில் ஊக்கத்துடன் உழைத்தல் வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணத் தின் மூத்த சட்டத்தரணி யான எஸ். கனகரத்தினத் தின் சேவைநலன் பாராட்டு விழாவில் தலைமை உரை யாற்றிய இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரி யர் கோபாலகிருஷ்ண ஐயர் கூறினார்.

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காமம் தேவஸ்தானத்தின் ஏற்பாட் டில் திவ்யஜீவன சங்க மண்ட பத்தில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து பேசிய பேராசிரியர் கூறியதாவது:-

ஊக்கமும் முயற்சியும் கொண்ட வாழ்வே சமூகத் தில் ஒருமனிதனுக்கு உயர்வை அளிக்கும் என்பதை கனகரத் தினம் அவர்களின் வாழ்க்கை யில் இருந்து அறியலாம். சட் டத்துறை, நீதித்துறையின் நல்ல வழிகாட்டியான அவர் குற்றமிழைத்தவர்கள், நல்ல வர்களாக, சமூகத்திற்கு உகந் தவர்களாக மாறவேண்டும் என்பதற்காக மேற்கொண்ட விஷேட பணிகள் அவரது உள்ளம் எப்படியானது என் பதைஎமக்கு உணர்த்துகிறது.

ஆத்மீகம், அன்பு, பண்பு, கடமையுணர்வு என்னும் மனிதவிழுமியங்கள் கொண்ட இப்பெரியார் கீதை, திருக் குறள் என்பன காட்டும் தத் துவத்துக்கு அமைவாக வாழ் வது பெருமைப்படத்தக்கது. ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தா னம் சமூகத்துக்கு உகந்த தொண்டுகளை — சிறப்பான சேவை செய்த இந்தப் பிர தேசத்தின் பெருமைக்குரிய வர்களை — கௌரவிக்கிறது. பெரியார் கனகரத்தினத் துக்கு எடுக்கும் இந்த விழா மூலம் நாம் நல்ல பயனைப் பெறவேண்டும் — என்றார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை கூறிய தாவது:—

இன்று எமது சமூகத்திற்கு வழிகாட்டக்கூடிய சிறந்த மனிதர்கள் தேவை. சட்டத் தரணியாக ஐம்பது ஆண்டு கள் பணிபுரிந்த அவர் சமூகத்திற்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளையும் பரிபூரணமாக நிறைவேற்றி னார். ஆன்மீகத்துறையிலும் தன்னை இணைத்துக் கொண்டு ஆலயங்கள் தொடர்பான விடயங்களைச் சிறப்புடன் கையாண்ட துடன் சிறைக்கைதிகளின் நலனிலும் அக்கறைகாட்டிய எமது பிரதேசத்தின் மூத்த பெரியாராக விளங்குகிறார் — என்றார்.

### அரச அதிபர்

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் பேசும்போதுகூறியதாவது:—

தன்னுடைய செயற்பாடு கள் மூலம் தனது ஆளு மையை வெளிப்படுத்தி சமூ கம் மதிக்கும் மனிதராக — இந்தப் பிரதேசத்தின் நல னுக்கு வழிகாட்டியாக — விளங்கும் சட்டத்தரணி கனகரத்தினம் தான் எடுத் துக் கொண்ட தொழிலைக் கடந்த ஐம்பது ஆண்டு களாக நல்ல முறையில் செயற்படுத்திவருகின்றார்.

பின்விளைவுகள், தேவை கள் எவை என்பதை முன் கூட்டியே உணர்ந்து செயற் படுவதில் நாட்டமுடைய அவர் எமக்கு நல்லாசிகளைக் கூறுவதுதான் முறை. அவர் எங்களை வாழ்த்தி நல்ல சேவைசெய்வதற்கான அறிவு ரைகளை வழங்க வேண்டும் என்பதே எனது விருப்பம்— என்றார்.

யாழ். மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ ஏகநாதன் பேசும் போது கூறியதாவது:-

கடந்த 1949 இல் சட்டத் தரணியாக [illegible] ணம் செய்து கொண்ட கனக ரத்தினம் அவர்கள் முடிக்கு ரிய வழக்கறிஞராக, சமூக வாதியாக, ஆத்மீக வாதியாக சமுதாயத்துக்குத் தனது அறிவை வழங்கி சமூகம் உயர பணியாற்றினார்.

தெய்வத்தை மனிதன்மட் டுமே நினைக்க முடியும். தெய் வீகமென்ற மாபெரும் சக் தியே உலக இயக்கத்துக்குக் காரணமாகும். திவ்யஜீவனசங் கத்தின் மூலம்மக்கள் மத்தியில் ஆன்மீகத்தின் முக்கியத்து வத்தை எடுத்துக் கூறியுள் ளார். அவருடைய வாழ்க்கை சமயவாழ்க்கையுடன்இணைந் தது. இன்று பஜனை, கூட்டுப் பிரார்த்தனை ஆகியவற்றில் பிள்ளைகள் அக்கறை காட்டு வதில்லை. ஆத்மீகத்தின் ஊடாக நல்ல வாழ்க்கை அமையும் என்ற சிந்தனையை அவர்போல ஒவ்வொருவரும் முன்னெடுக்க வேண்டும்—என் றார்.

சட்டத்தரணி எஸ். கனக ரத்தினம் தமது பதிலுரை யில் கூறியதாவது:-

எனது பணி நியாய பூர்வ மானது என்றால் அதற்கு எமது பிரதேச மக்கள் என் மீது கொண்ட அன்பும் நம் பிக்கையும் தான் காரணம். இன்றைய விழா எனக்கு ஒரு திருப்தியைத் தருகிறது. நான் முடிந்தவரை எமது மக்களுக் கும் பிரதேசத்துக்கும் தொண் டாற்றியுள்ளேன் என்ற மன மகிழ்ச்சியை இதனூடாகப் பெறுகின்றேன். ஒவ்வொரு வரும் இறைபக்தியும் பிறருக்கு உதவும் பண்பும் கொண்டு வாழ வேண்டும் என்பதே எனது விருப்பம். நான் ஏதா வது சிறிய பணி இந்தப்பிர தேசத்துக்கு, மக்களுக்கு ஆற் றியிருந்தால் நீங்கள் அளித்த இந்தபிரமாதமான பாராட்டு விழாவுக்காகவும் அதனை ஏற்பாடு செய்த பாலகதிர் காமம் தேவஸ்தான பிரதம குரு மதிப்புக்குரிய குமாரக் குருக்கள் ஐயா அவர்களுக்கும் சசிகுமாரசர்மா அவர்களுக் கும் எனது உளமார்ந்த நன்றி யைத் தெரிவிக்கின்றேன் — என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச் சாரிய சுவாமிகளும் வண பிதா சூ. டேமியனும் ஆசி யுரை வழங்கினர்.

துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி இளைப்பாறிய நீதிபதி மு. திருநாவுக்கரசு, யாழ். பல் கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவ லிங்கராஜா, பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர், சமூகவியல் துறைத்தலைவர் கலாநிதி என். சண்முகலிங் கன், யாழ். காணிப்பதிவாளர் பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர், பிரம்மஸ்ரீ சசிக்குமார சர்மா, திருமதி அ. சூரசங்காரன் உட் பட பலர் உரையாற்றினர்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கனகரத்தினத்துக்கு பொன் னாடைபோர்த்துமலர்மாலை அணிவித்துக் கௌரவித்தார்.

கவிமாமணி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் வாழ்த்துப்பா வழங்கினார். (ஐ-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தண்டனை தேவை

உருப்பிராய், ஊரெழுப் பகுதிகளில் பாவனைக்காலம் முடிந்த குழந்தைகளுக்கான பால்மா விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போதே கடைகளில் காலங்கடந்த குழந்தைகளுக்கான பால்மா பைக்கட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை அழிக்கப்பட்டன.

அண்மைக் காலமாக, மனித பாவனைக்கு உதவாத, காலங் கடந்த பலவகை உணவுப் பொருள்களும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் விற்பனையாவதாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. வர்த்தகர்கள், அவர்கள் மொத்த வியாபாரிகளாக இருப்பினும் சரி, சில்லறை வியாபாரிகளாக இருப்பினும் சரி தாம் நஷ்டமடையக்கூடாது என்பதற்காகவே பாவனைக்கு உதவாத உணவுப்பொருள்களை மக்களிடம் கட்டிஅடிக்கிறார்கள்.

பாவனைக்குதவாத உணவுப் பொருள்களை மக்கள் உட்கொள்வதால் அவர்கள் நோய் வாய்ப்பட நேரிடும். சில சந்தர்ப்பங்களில் உயிராபத்தும் உண்டாகக் கூடும். இதனை அறியாத வர்த்தகர்கள் எவரும் இருக்க முடியாது. அவ்வாறு தெரியாதிருப்பின் அவர்கள் வியாபாரிகளாக இருக்கத் தகுதியற்றவர்கள்.

வர்த்தகர்களில் ஒரு சாரார் சந்தர்ப்பம் பார்த்துப் பதுக்கல், கொள்ளை இலாபம் ஆகிய சமூக விரோத, சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அவர்களைச் சட்டத்தின் முன்னால் நிறுத்தி தண்டனை வழங்குவது மிகவும் குறைவு. இதனை வாய்ப்பாக எடுத்துக் கொண்டே பாவனைக்கு உதவாத, காலம் பிந்திய பொருள்களை விற்கும் தீவிர குற்றச் செயல்களிலும் வர்த்தகர்கள் அச்சமின்றி ஈடுபடுகிறார்கள்.

பாவனைக்கு உதவாத பொருள்களை விற்போர் கொலை முயற்சியில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு நிகரானவர்கள். அவர்கள் விற்பனை செய்யும் அத்தகைய பொருள்களைக் கைப்பற்றி அழிப்பதோடு மட்டும் நிற்காமல், அவர்களின் வர்த்தக லைசென்ஸ்களை ரத்துச் செய்வதோடு மட்டும் நிற்காமல், அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டனையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

சமூக விரோத, சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களில் ஒரு சிலரையாவது தக்கவாறு நீதிமன்றத்தினூடு தண்டித்துப் பிரசித்தப்படுத்தினால் மட்டுமே, ஏனையோருக்குப் படிப்பினையாக அமையும். அவ்வாறு செய்யும் போது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெரிய முதலைகளைத்தவிர்த்துநெத்தலிகளை மட்டும் நீதிமன்றத்துக்கு கொண்டு வருவதற்கு முயலக்கூடாது.

இது விடயத்தில் மட்டுமன்றி, எந்த விவகாரத்திலுமே பெருச்சாளிகள் தப்பிக்கொள்ள சுண்டெலிகளே பிடிக்கப்படுவது உண்டு. மக்களின் உயிரோடு விளையாடும் பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களை விற்போருக்குக் கடுந்தண்டனை வழங்க வேண்டும்.

இத்தகைய வர்த்தகர்கள், வியாபாரிகள் நீதிமன்றத்துக்குத் தம்மை இழுக்கக் கூடியவர்களை இனங்கண்டு தம் வசமாக்கவும் முனைவர். ஆகையால் சம்பந்தப்பட்டவர்கள் அவர்களின் வலைக்குள் விழாமல் இருந்தால் மட்டுமே வர்த்தக உலகத்தில் நிகழும் சட்ட விரோதச்செயல்களை குறைக்க இயலும். இல்லையேல் எல்லோருமாகச் சேர்ந்து மக்களின் முதுகில் குதிரைவிடும் நிலையே மிஞ்சும்.

### தமிழரின் எதிர்கால நலனுக்காக

# கொழும்பு மூத்த தமிழ்ப் பிரஜைகள், வர்த்தகர் ரணிலை ஆதரிக்கமுடிவு

தமிழ் மக்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளிப்பதென்று தமிழ் மூத்த துவர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், அரச அதிகாரிகள் அடங்கிய துறைசார் நிபுணர்கள் குழுவொன்று கொழும்பில் தீர்மானித்துள்ளதாக அரசியல்வாதி அல்லாத மூத்த தமிழ் பிரஜை ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் செயற்பட்டு வந்த விதம் குறித்துத் தமிழ் மக்கள் விரக்தியும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

இக் காலப்பகுதியிலேயே தமிழ் மக்களின் துயரங்கள் முன்னரைவிட அதிகரித்துள்ளன. இந்த நிலையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிப்பது என்பது சாதியப்பாதது என்பது அர்த்தமற்றதுமான ஒன்று என முடிவுத் தமிழ்க்குழு கொழும்பில் கூடித் தீர்மானித்துள்ளதாகவும்—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்துத் தெளிவான முடிவு எதையும் எடுக்காமல் தமிழ் மக்களைக் குழப்பநிலையில் வைத்திருக்கும் நீண்ட அரசியல் பாரம்பரியம் மிக்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகள் கோமாளித்தனமானதும் துரோகமானதும் எனவும்—

அந்த மூத்த பிரஜை தெரிவித்துள்ளார்.

வாசுதேவ நாணயக்காரவுக்குமக்கள்வாக்களிக்கும்பட்சத்தில் தமக்கு குறிப்பிடத்தக்க நன்மைகள் எதுவும் ஏற்படப்போவதில்லை. இவற்றைக் கருத்திற்கொண்டே ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதென முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும்—

தமது இம் முடிவை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு ஆதரவளிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

**வர்த்தகர்கள்**

இதேவேளை —

கொழும்புவாழ்தமிழ்வர்த்தகப் பிரமுகர்களைச் சந்தித்துரையாடிய ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு கிழக்கு பிரதான அமைப்பாளர்மிலிந்த மொரகொட, அவ்வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கம் தீர்த்து வைக்கும் என உறுதிமொழி வழங்கினார்.

நூற்றுக்குமேற்பட்ட வர்த்தகப் பிரமுகர்கள்அழைத்த அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. மிலிந்த மொரகொட ஏற்பாடு செய்த இந்தக்கலந்துரையாடலில் ஐ.தே.க தலைவர் கருஜெயசூரிய முன்னாள் மேல்மாகாண ஆளுநர் டி.எம். சுவாமிநாதன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் வி. மகேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வர்த்தகர்கள் கடந்த ஐம்பது வருடங்களாகத் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விளக்கினர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் நாம் அனுபவித்து வந்த சலுகைகள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சியில் இல்லாது போனதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது வர்த்தக சமூகத்தவரது பிரச்சினைகள் குறித்து ஒவ்வொரு மாதமும் எம்மை அழைத்துக் கலந்துரையாடுவார் ஆனால் கடந்த ஐந்து வருட காலத்தில் தாம் ஒரு தடவையாவது அரசுடன் கலந்துரையாடி தமது பிரச்சினைகளை எடுத்துக்கூற சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை எனவும் —

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் பணப்புழக்கம் தாராளமாக இருந்ததாகவும் தற்போது ஓர் ஆயிரம் ரூபாவைத் தேடுவதாயினும் பெரும் சிரமப்பட வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஐந்து வருட காலமாக வர்த்தகர்கள் பற்றிய எவ்வித நினைப்பும் இன்றி இருந்த அரசு தற்போது தேர்தலுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பத்தில் மட்டும் எம்மை அழைத்துக்கலந்துரையாடி சில ஆசைவார்த்தைகளைக் கொட்டியது. ஆனால் நாம் அவற்றை நம்பவில்லை. ஏனெனில் இது ஒரு தேர்தல் சுதந்திரம் என்பது எமக்குத் தெரியும். ஐ.தே.க ஆட்சியை அமைத்தால மட்டுமே எமது சமூகம் மீண்டும் தலைதூக்கக் கூடியதாக இருக்கும் எனவும் —

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் ஜி. எஸ். ரி வரியை மக்கள மீது திணித்தது. இதே போன்று வர்த்தக நிறுவனங்கள் மீதும் வரிவிதிப்புக்கள் இவை நீக்கப்பட வேண்டும் எனவும் வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

வர்த்தகர்களின் பிரசினைகளை நன்கு செவிமடுத்த மிலிந்த மொரகொட, அவர்களது பிரச்சினைகளை ஐக்கிய தேசியக்கட்சி நிச்சயம் தீர்த்து வைக்கும் என்றும் —

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியவுடன் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள ஜி.எஸ்.ரி வரிமுறை நீக்கப்படும். அத்துடன் வர்த்தகர்கள தமது நடவடிக்கைகளைச் சுதந்திரமாக மேற்கொள்ள ஆவன செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ரணில் விக்கிரமசிங்க முனைப்பாக உள்ளார், யுத்தம நிறுத்தப்பட்டு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால நாட்டின் நிலவும் 90 வீதமான பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட்டு விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வரி அறவிடும் நடைமுறைகள் இருக்கத்தான் செய்யும், ஆனால் அவை மக்களைப் பாதிக்காத வகையில் அமைய வேண்டும். எமது நாடுஅபிவிருத்தி அடையும் பட்சத்தில் சிங்கப்பூர் போன்றதொரு நாடாக மாறும், அதற்கு வர்த்தக சமூகத்தவரது பங்களிப்பு மிக முக்கியம்.

எனவே எதிர்வரும் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்காவைத் தெரிவு செய்து இந் நாட்டின் ஜனாதிபதி ஆக்குவதன் மூலம் அனைத்து தரப்பு மக்களது பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டு விடும என மொரகொட மேலும் தெரிவித்தார்.

(ஐ-க-4)

## கூ. சங்கத்தின் பேக்கறியில் பாண்

யாழ்ப்பாணம். டிசெ. 19

உரும்பிராயில் அமைந்துள்ள நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பேக்கறியில் உற்பத்தி செய்யப்படும் பாண் (350 கிராம்) விலைக் கழிவுடன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பேக்கறிக்குச் சென்று கொள்வனவு செய்யும் வியாபாரிகளுக்கு 7 ரூபாவாகவும்—

பேக்கறிப் பணியாளர்களால் எடுத்துச் சென்று விநியோகிக்கப்படும் பாண் 7 ரூபா 50 சதமாகவும்—

விற்பனை செய்யப்படுகிறது.

எனவே கடைகளில் 8 ரூபாவாக மேற்படி பாணை விற்க முடியும் என பேககறியின் முகாமையாளர் சு. சிவராசா தெரிவித் தார்.

(ஐ-10)

## பாதுகாப்புக் கோருகிறார் சந்திரசேகரன் எம். பி.

கொழும்பு, டிசெ. 19

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான பி. சந்திரசேகரன் அண்மையில் தோட்ட வீடமைப்பு பிரதியமைச்சர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து அமைச்சு பாதுகாப்பு பிரிவினால் (எம்.எஸ்.டி) அவருக்கு வழங்கப்பட்டிருந்த மேலதிகப் பாதுகாப்பு கடந்த வியாழக்கிழமை முதல் மீளப் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை —

தற்போது அரசுக்கு எதிராக பிரசாரங்களில் ஈடுபட்டு வரும் தனக்கு பல முனைகளிலும் இருந்து அச்சுறுத்தல்கள் வரலாம் என்றும் —

மீண்டும் அதே பாதுகாப்புக் குழுவை தனக்கு மீள ஒதுக்கித் தரவேண்டும் என்றும்—

அவர் பொலீஸ் மா அதிபரைக் கேட்டுள்ளார். (க)

## நாளை

மார்கழி 5

திங்கட்கிழமை

திதி: துவாதசி

காலை 7.06 வரை.

திரயோதசி — பின்னிரவு 4.55 வரை.

நட்சத்திரம்: கார்த்திகை

பின்னிரவு 3.52 வரை.

கார்த்திகை விரதம், பிரதோஷ விரதம்

சுபநேரம்: 12.24—1.54

ராகுகாலம்: 7.54—9.24

(பகலுக்கும் [illegible] பழைய [illegible])

## உதய வாக்கு

ஓர் ஆடு சிக்கினால், இராஜ தந்திரிகள் அதன் உரோமத்தை மட்டும் கத்தரித்துக் கொள்வர். ஆனால் அரசியல் வாதிகள், அதன் தோலையே [illegible]

— [illegible]

## எதிரொலி...

- இடியன் -

● தேர்தல் சம்பந்தமாக அதிக அளவில் வன்செயல்களில் ஈடுபடுவதாக இரு பெரும் கட்சிகளும் ஒன்றையொன்று குற்றஞ் சாட்டுகின்றன.

★ என் செயல் நன்செயல்; உன் செயல் வன் செயல்!

● ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்குச் சர்வதேசப் பார்வையாளர்கள் வருகின்றனராம!

★ அவர்கள் வெறும் 'பாவை'யாளர்களாக இருந்து விடக் கூடாதே என்பதுதான் ஸ்ரீமான் தமிழ்ப் பொதுசனத்தின் கவலை!

● முளை திறன் அற்ற விதைகள் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண விவசாயிகள் முறையிட்டுள்ளனர்.

★ மூளைத் திறன் அற்ற சிலரின் செயலாக இருக்குமோ?

● பருவமடையாத இளைஞன் ஒருவனைக் கடத்திச் சென்றுள்ளதாக இளம் பெண் ஒருத்தியின் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது!

★ "கடத்திகள் ஜாக்கிரதை" என இளைஞர்கள் எச்சரிக்கப்படும் காலம் இனி வந்துவிடுமோ?

● பொதுப் பரீட்சையில் மோசடி செய்ததற்காக நியூயோர்க் நகரில் 12 ஆசிரியர்கள இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்!

★ ஆ!சிறியர் செய்கை செய்திர!

● இரசாயன மருந்து போடபபட்ட விதை உருளைக் கிழங்கு சில கடைகளில் உணவுக்காக விற்பனை செய்யப்படுகின்றதாம்!

★ பணம் பண்ணும் நோக்கம் பிணம் பண்ணுவதில் முடியக்கூடும்!

● யாழ்ப்பாணத்திலே கள்ள வாக்குப் போடும் வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாக ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்!

★ இரவில் நடக்கும் களவுகளைத்தான் தடுக்க முடியவில்லை; பகலில் நடக்கவுள்ள களவையாவது தடுக்க முடியாதா? எனக் கேட்கின்றார் நீதியின் பக்கம் நிற்கும் ஒருவர்!

● இப்போது 'ரணில் அலை' வீசத் தொடங்கியுள்ளபடியால், பங்குச் சந்தையில் விலைகள் உயர்ந்துள்ளனவாம்!

★ தேர்தல் முடியும்வரை இந்த அலை ஓயாது இருக்குமா என்பதை அறியும் ஆர்வம் பலருக்கு இருக்கிறதாம்!

● கொழும்பிலுள்ள ஒன்பது வயதுச் சிறுவனுக்கும் வாக்காளர் அட்டை வழங்கப்பட்டிருக்கின்றதாம்.

★ இந்த நாட்டின் சிறுவர்களுக்கும் "வாக்கு"ண்டாம் என்று சொல்லும் நல்ல மனம் தேர்தல் திணைக்களத்திலுள்ள மூதாட்டிகளுக்குண்டு என இதைக் கொள்ளலாமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HARVEST

# ஹாவஸ்ட்

## புதுச்சுவை குன்றாத தேநீர்

மலையகத்தின்
பசுமையான
தோட்டங்களிலிருந்து
வரும் ஹாவஸ்ட்
தேயிலை...

நறுமணமும்
புத்துணர்வும்
தந்திடும் தேநீரை
நீங்கள் பருக
நுட்பமாகக்
கலவை
செய்யப்பட்டுள்ளது.




## 100 கிறாம் பக்கெட்டுகளில் கிடைக்கும்

Marketed by
**Burns
Philp Lanka (Pvt) Ltd.**
124, Templers Road, Mt Lavinia.


Stockist in jaffna
**Jeyarasa & Company**
104, A, Stanley Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் - 1999



## ரணில் விக்கிரமசிங்க



1

## ஐக்கிய தேசியக் கட்சியின் உறுதிமொழிகள்

- ⊗ வடபகுதிக்கு (தரைமார்க்கமாக) உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்கள் அனுப்ப நடவடிக்கை.
- ⊗ வன்னியில் அவதியுறும் அப்பாவி மக்களுக்கு உடனடி நிவாரணம்.
- ⊗ புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி போரினை முடிவுக்குக் கொண்டுவருதல்.
- ⊗ மக்கள் அனைவராலும்ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு மூலமாக இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணல்.
- ⊗ அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்பட்டு இம்சைப்படுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்படல்.
- ⊗ கொடிய யுத்தத்தினால் மரணித்த அப்பாவி மக்களுக்கு நஷ்டஈடு; அகதிகளுக்கு புனர்வாழ்வு.
- ⊗ போரினால் சின்னாபின்னமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் துரித புனரமைப்புப் பணிகள்.
- ⊗ படைத்தளபதிகளுடனும், சமூகத்தலைவர்களுடனும் கலந்துரையாடி வட - கிழக்கில் சீரான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துதல்.

## ரணிலின் வெற்றி தமிழ் மக்களுக்கு விமோசனம்

(C/10246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## சவரிமுத்து பேரின்பநாதன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் வீதி அபிவிருத்தித் திணைக்களம், பருத்தித்துறை)

எமது திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்
அமரர் சவரிமுத்து பேரின்பநாதன்
அவர்களின் அகால மரணத்தை அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைஇறைஞ்சுகின்றோம்.

வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரர்கள்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணப் பிரிவு.
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (71879)

# அனுதாபச் செய்தி

## அமரர் சவரிமுத்து பேரின்பநாதன்

அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கு

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் (பருத்தித்துறை பிரிவு) தொழில் நுட்ப உத்தியோகத்தராகப் பணிபுரிந்த அமரர் சவரிமுத்து பேரின்பநாதன் அவர்கள் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் அகால மரணம் அடைந்துள்ளதாக அறிந்து ஆழ்ந்த கவலை அடைகிறோம். அவரது இழப்பினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாகாணப் பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
திருகோணமலை. (71878)

# கண்ணீர் அஞ்சலி

இணுவில் இந்துக் கல்லூரி
கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின்
ஸ்தாபகரில் ஒருவரும் [முன்னாள்]
வடமாநில கல்விப்பணிப்பாளரும்
வடக்கு—கிழக்கு மாகாண பரீட்சை ஆணையாளருமான

## திரு. இரா. சுந்தரலிங்கம்

அவர்களின் துணைவியார்

## திருமதி தேவராணி சுந்தரலிங்கம்

15—12—99 அன்று சிவபதம் எய்தியுள்ளார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இணுவில் இந்துக் கல்லூரி
கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்,
இணுவில் இந்துக் கல்லூரி
இந்துக கல்லூரி கல்விச் சமூகம்.
[71880]

# நீங்கா நினைவில் நான்காம் ஆண்டு

அன்னை மடியில்:
12 — 02 — 1968



பகவான் அடியில்;
01 — 01 — 1996

## குணபாலசிங்கம் கிருபாகர் (G.K)

(விவசாய பொருளியல் சிறப்பு இறுதியாண்டு மாணவன், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம்)

திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி 19 = 12 = 1999

உம்மை எங்கோ தவறவிட்ட உணர்வில்
தேடிக்காலம் கழிக்கின்றோம் மீண்டும் நாம்
ஒன்றாய்க் கூடி மகிழும் நிலையை பகவானே
எமக்குத் தெரிவித்தருள வேண்டும்.

அம்மா, அக்கா, அண்ணா, அண்ணி

அண்ணர்
கு. சாந்தமோகன்
(கிராம அலுவலர்)
கொக்குவில் (71884)

# விளையாட்டு உபகரணங்கள் கிடைத்தன

வலிகாமம் தெற்கு, டிசெ. 19

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினரின் இவ்வாண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டிலிருந்து பெறப்பட்ட 50 ஆயிரம் ரூபா மதிப்புடைய விளையாட்டு உபகரணங்கள், இப்பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட 24விளையாட்டுக் கழகங்களுக்கு பகிர்தளிக்கப்பட்டுள்ளன.

[ஐ-152]

# போட்டிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்படவிருந்த பொது அறிவுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி என்பன தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப் பட்டுள்ளதாக சம்மேளனத்தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ-9)

# கூரைத்தகடு விநியோகம்

வலிகாமம்தெற்கு. டிசெ. 19

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நுண்கருத்திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில், வன்செயல்கள் காரணமாக அசையும் அசையா சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மீளமைக்கும் நோக்குடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவரும் உதவித்திட்டங்களின் கீழ் மேலதிகமாக பத்தாயிரம் ரூபா மதிப்புடைய அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஐ-152)

# நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படும்

வலிகாமம் தெற்கு, டிசெ. 19

அளவெட்டி, மல்லாகம் பகுதிகளில் எதிர்வரும் 23 ஆம் திகதி கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட உள்ளன.

பிரதேசசபைத் தொழிலாளரால் மேற்கொள்ளப்பட உள்ள இந் நடவடிக்கைகளின் போது இப்பகுதியில் வாழும் மக்கள் தமது வீட்டு வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

(ஐ-152)

# பிரதேச சபைக்கு உழவு இயந்திரம்

நெடுந்தீவு பிரதேச சபை பெட்டியுடன் கூடிய இரண்டு சக்கர உழவு இயந்திரத்தைக் கொள்வனவு செய்துள்ளது.

3 லட்சம் ரூபா விசேட மூலதன நிதியில் இருந்து மேற்படி உழவு இயந்திரத்தை பிரதேச சபை கொள்வனவு செய்துள்ளது. (ஐ-111)

# திருவாசக விழா

யாழ்ப்பாணம், டிசெ.19

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த திருவாசக விழா இன்று காலை 9 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக முன்னாள் வடக்கு—கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி கலந்து கொள்வார்.

அன்று காலை செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட அபிடேக ஆராதனைகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் உருவப்படமும், [illegible] எடுத்துவரப்படும்.

(ஐ-15-30)

# பட்டதாரி பயிலுநருக்கு அடுத்தஆண்டுநிரந்தர நியமனம்

வலி. தென்மேற்கு, டிசெ. 19

யாழ். மாவட்டத்தில் பயிலுநர் நியமனம் பெற்ற 285 பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் அடுத்த வருடம் மே 17 ஆம் திகதி வழங்கப்படும் என தேசிய வரவு செலவுத் திட்டப்பணிப்பாளர் நாயகம் எஸ். பி. திவாரத்தினா அறிவித்துள்ளார்.

கடந்த 17 - 05 - 99 முதல் மாவட்ட மட்டத்தில் பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களிலும் அபிவிருத்தி இணைப்பாளர், அபிவிருத்தி உதவியாளர். மொழிபெயர்ப்பாளர், வரவு செலவுத்திட்ட உதவியாளர், காணி அலுவலர், இளைஞர் சேவை அதிகாரி, நூலக அபிவிருத்தி உதவியாளர் போன்ற பதவிகளில் ஒரு வருட பயிற்சியை முடித்தவர்களுக்கு சம்பந்தப்பட்ட துறைகளில் பரீட்சை நடத்தாமலேயே நிரந்தர நியமனம் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-185)

# சிற்றுண்டிச்சாலை கேள்விக் கோரிக்கை

யாழ். வை. எம். சி. ஏ. சிற்றுண்டிச்சாலை குத்தகைக்குக் கொடுக்க கேள்விக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட இருக்கின்றது.

இதற்கான கேள்விக் கோரிக்கைகளை
28 - 12 - 99 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலம்
பொதுச் செயலாளர், வை. எம். சி. ஏ.
109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்
என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

(71883) பொதுச் செயலாளர்.

# மரண அறிவித்தல்கள்

## யோசவ் றிச்சேட் (பெயின்ரர்)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசவ் றிச்சேட் (பெயின்ரர்) 18-12-1999 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் ஜோசவ், எலிசம்மா (மாதா) ஆகியோரின் பாசமிகு மகனும் ஆசீர்வாதம் லோறன்ஸ், அக்னஸ் (அம்மாப்பிள்ளை) ஆகியோரின் மருமகனும், திரேசாவின் (சறோ) அன்புக்கணவரும், கிறேஷியன் (அமெரிக்கா), நிக்ஷன் (நோர்வே), ஜெபன் (லண்டன்), அனுஜா (லண்டன்), ஷியான் (நோர்வே), நீருஜா (யாழ். பல்கலைக்கழகம் 1 ஆம்வருடம்), மேரி மெற்றில்டா, குயின்சி (யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லியோ தவமணி (நோர்வே), டேவிட் (டேவோ தபாற்கந்தோர் கொட்டஹேனா, கொழும்பு) காலஞ்சென்ற அருளப்பு டெய்சி, அருளானந்தம் (துரை), அல்பிறட் (ரேணுகா ரெக்ஸ் ரைஸ் (உரிமையாளர் கொழும்பு), (நேசதுரை) யேசுதாஸ் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும், றொசிற்றா, மதுமதி, நந்தினி, சிவா, தர்மகுலசிங்கம் ஆகியோரின் மாமனாரும், மைக்கல், கெலன், நிவேதா, நான்சி, தனுஷியா, பிரியங்கா ஆகியோரின் பேரனும், மலர் ஏபிரகாம், டானியல், யேசுதாசன், காலஞ்சென்ற தேவதாசன் காலஞ்சென்ற பிலோமினா, யோகம் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (19-12-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 30 [S. L. T) மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் 2/1, றக்கா லேன் இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மனைவி - திரேசா
மகள் - நீருஜா

19, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (71885)

## திருமதி றஞ்சினிதேவி வசந்தரூபன்

(மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் . கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றஞ்சினிதேவி அகால மரணமாகிவிட்டார்.

இவர் வசந்தரூபனின் அன்பு மனைவியும், சுஜீபன், சுஜீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கதிரித்தம்பி, அரியமணியின் அன்பு மகளும், ஆனந்தநடராசா, சிவசோதியின் அன்பு மருமகளும், பாக்கியலெட்சுமி, சந்திரவதனா (ஜேர்மனி), மதுரநாயகம் (கனடா), நானசேகரம் (சுவிஸ்), சாந்தன் (சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான லலிதா, நிர்மலா, குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளன் (கனடா), ஜெயந்தன் (சுவிஸ்), சுதர்சன் (கனடா), முகுந்தன், திலீபன் (கனடா) ஆகியோரின் அண்ணியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 — 12 — 99 ஞாயிற்றுக்கிழமை (இன்று) கொழும்பில் நடைபெறும.

தகவல்
ஆ. சண்முகலிங்கம்
[மாமன்]

59/1, மூரிஸ் வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு 6. (71876)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, சுகாதாரம் இரண்டையும் கண்களாக நேசித்த கார்டினர்

## நூற்றாண்டு விழா உரையில் புகழாரம்

அச்சுவேலி, டிசெ. 19

''தன்னைப்போல மற்றவர்களையும் விசுவாசத்தோடுநேசித்த சேர்கார்டினர் சிற்றம்பலம் ஏபிரகாம் கல்வியையும் — சுகாதாரத்தையும் தனது இரு கண்களாகக் கொண்டு தன்னலமற்ற சேவை செய்த பெருந்தகை.''

இவ்வாறு கூறினார் யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அதிவண பிதா ஜே.பி.ஈ. செல்வராசா.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் ஸ்தாபகர் சேர் கார்டினர் சிற்றம்பலம் ஏபிரகாமின் நூற்றாண்டு விழா வைத்தியசாலை வளவில் ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர் கே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு குருமுதல்வர் ஜே.பி.ஈ செல்வராசா அடிகளார்உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது:-

கார்டினர் சிற்றம்பலம்ஏபிரகாம் தான் பிறந்த மண்ணையும் தனது மக்களையும் மிகவும் நேசித்தவர். இதனை அவரது பணிகள் எடுத்துக் காட்டுகின்றன. அச்சுவேலி வைத்தியசாலை, அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, கார்மேல் கன்னியர் மடம் என்பன அச்சுவேலியில் அவரின் பணிகளை எடுத்துக் காட்டுகின்றன.

அவரின் இறைபற்றுக்கும் ஆன்மீக வாழ்வுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர் அதிவண தோமஸ்அடிகளார். வயாவிளான் ஆச்சிரமத்தில் தோமஸ் அடிகளாரிடம் அவர் கொண்டிருந்த தொடர்பு இறைபணியில் ஈடுபாடு கொள்ளச் செய்தது.

தொழில் அதிபராகவும் பிரபல நிறுவனங்களின் அதிபதியாகவும் பெரும் தனவந்தராகவும் விளங்கியபோதிலும் தான் பிறந்த கிராமத்தை மறந்துவிடாமல் தனது பணிகளை மிகவும் அடக்கத்தோடு நிறைவு செய்தவர். தனது நிறுவனங்களில் யாழ். மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கி உதவியவர்.

கொழும்பிலும் அவரது பணிகள் நின்று நிலைக்கின்றன. அவரது சேவைகள் நினைவு கூரப்பட வேண்டியன — என்றார்.

விழாவிற்குதலைமைவகித்து கே. சிவசுப்பிரமணியம் உரையாற்றும் போது:-

தனது பிறந்த ஊரின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு உழைத்த உத்தமர் சேர்கார்டினர் சிற்றம்பலம். அவரின் சொந்த நிலத்தில் தனிப்பட்ட உழைப்பில் உதித்தது அச்சுவேலி வைத்தியசாலை. 1946ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த வைத்தியசாலையின் வளர்ச்சி அவரின் பணிகளைத் தெளிவுபடுத்தி நிற்கின்றது. சேர் சிற்றம்பலத்தின் சாதி மதம் கடந்த தன்னலமற்ற சேவை எல்லோராலும் நினைவு கூரப்பட வேண்டியது — என்றார்.

விழாவில் வைத்தியசாலை வைத்திய அதிகாரி இராசலிங்கம் கத்தோலிக்க ஒன்றியத்தின் செயலாளர் இராசேந்திரம் ஆகியோரும் உரையாற்றினர்.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையும் அச்சுவேலி கத்தோலிக்க ஒன்றியமும் இணைந்து நடத்திய இந்த விழாவின் ஆரம்பத்தில் திருப்பலி பூசை நடைபெற்றது. (ஐ-11)

# புகலிடச் சூழலில்...

(3ஆம் பக்கத் தொடர்)

தில் சிரிப்பலைகளோடு சிந்தனையை இளறக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கையிலும் புகலிட நாடுகள் பலவற்றிலும் பல தடவைகள் மிகவும் வரவேற்கப்பட்டுபாராட்டுப்பெற்ற நாடகம் இது.

'காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்' என்று பாரதியார் பாடியுள்ளார். 'ஆண்ட நம்மினம் ஆளநினைப்பது தவறோ?' என்றார் கவிஞர் காசி ஆனந்தன். ஓரடி நிலத்தைக் கூட அயலவருக்கு விட்டுக்கொடுக்க மறுத்த நாம் இன்னோர் இனத்துக்கு நமது சந்ததி நிலத்தை விடலாமா? நிலப்பிரச்சினையால் நம் நாட்டில் இன்று இரத்த ஆறு ஓடுகிறது. இது உலகமே அறிந்த விடயம் தான். இப்படியான பல சிந்தனைக் கிளறல்களை இந்த 'சம்மந்தம்' என்ற நாடகம் கொண்டுவந்தது.

அடுத்து இடைவேளையை தொடர்ந்து மேடையேறியது 'மழை' என்ற நாடகம். அவைக்காற்று கழகத்தின் சிறந்த நாடகங்களில் ஒன்றான இந்த 'மழை' நாடகம் 1976 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மேடையேறி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒதுக்குப் புறமான கிராம மொன்றில் புத்தகங்கள் நடுவே வாழ்க்கை நடத்தும் பேராசிரியர் சந்திரசேகர்; வயதாகியும் திருமணமாகாமல் இருக்கும் அவரின் மகள் நிர்மலா; வீட்டைவிட்டு வெளியேறி நீண்டகாலத்திற்குப் பிறகு வீட்டுக்கு மீளவும் வரும் மகன் ரகு. பேராசிரியருக்கு வைத்தியம் பார்க்கும் டாக்டர் ஜேம்ஸ் ஆகிய நால்வருக்கும் இடையில் நிகழும் உணர்ச்சிமோதல்களை இந்த நாடகம் வெளிப்படுத்துகிறது. பேராசிரியர் இந்திரா பார்த்த சாரதி எழுதிய இந் நாடகத்தை கே. பாலேந்திரா நெறியாள்கை செய்திருந்தார். 1976 முதல் ரகு, நிர்மலா பாத்திரங்களில் முறையே பாலேந்திராவும், ஆனந்தராணியும் நடித்து வருவது சுவையான அம்சமாகும். நெறியாளர், உதவி நெறியாளர் அதற்கு மேலாக கணவன், மனைவி இவ்விருவரும் சகோதரங்களாக நடித்த காட்சிகள் மெய்சிலிர்க்க வைத்தன. பாலேந்திராவின் தொடர் நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும் என்ற கொள்கைப்படி இன்றும் தொடர்ந்தும் இந்த நாடகம் மேடையேறுவது குறித்து பேராசிரியர் மிகுந்த மகிழ்ச்சியை இப்போது தெரிவித்துள்ளார். தொடர்ந்த மேடையேற்றங்களின் அறுவடையாக, மேடையேற்றத்தின் நேர்த்தி காணப்பட்டதாக அண்மையில் ஒரு விமர்சனக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நேர்த்தியை தற்போது அவைக்காற்றுக் கழக மேடையேற்றங்களில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது ஓவியர் கிருஷ்ணராஜாவின் மேடையமைப்பு (கற்பனை திறன் மிகுந்த) நாடகத்திற்கு இன்னுமொரு ஆழ்ந்த பரிமாணத்தைக்கொடுக்கிறது அத்துடன் ஜேம்ஸ் ஆக அவர் நாடகத்தில் நடிப்பது குறிப்பிடத்தக்கது மனோ மனுவேற்பிள்ளை பேராசிரியர் சந்திரசேகராகநடித்திருந்தார் மழை நாடகத்தில் ஒளியமைப்பும் பின்னணி இசையும் நாடகத்தின் உணர்வு சூழலுக்கு மனோ தத்துவ ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அடுத்து அர்ஜீனன் மனுவேற்பிள்ளையின் புதிய ஓர் அரங்க நிகழ்வான 'டயலக்' இடம்பெற்றது. ஆங்கிலத்தில் நிகழ்ந்த போதும ரசிகர்கள் அனைவராலும் மிகவும் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது இந்த நிகழ்வு.

இதனைத் தொடர்ந்து செக் நாட்டு அதிபர் வஸ்லவ் ஹாவல் அவர்களது மூலத்தைத் தழுவி பேராசிரியர் சி. சிவசேகரம் எழுதிய 'பிரத்தியேகக் காட்சி' என்னும் நாடகம் மேடையேறியது. கே. பாலேந்திராவின் நெறியாள்கையில் இடம்பெற்ற இந்த நாடகத்தில் மூன்றே மூன்று பாத்திரங்கள் தான். ஆடம்பரமான வாழ்க்கையை அனுபவிக்கும் இந்திரன் — சஸி தம்பதியர், வசதி குறைந்து நொந்து போயிருக்கும் தமது எழுத்தாள நண்பனான கணேசை வீட்டிற்கு விருந்திற்கு அழைத்து பிரத்தியேகமாக தமது ஆடம்பரத்தைக் காட்சிப்படுத்தி தம்பட்டம் அடிக்கும் சுவாரஸ்யமான நகைச் சுவை நிறைந்த சம்பவத்தை காட்டிநிற்கிற இந்நாடகம் நம்மவர் பலருக்கு ஏற்பட்ட அனுபவங்களை நினைவுபடுத்தியிருக்கும். இது நாடகாசிரியரின் அனுபவத்தின் வெளிப்பாடாகும்.

ரஷ்ய ஆக்கிரமிப்பு காலத்தில் எழுதப்பட்டது எமது நாட்டுச் சூழலுக்கு மிகவும் அச்சொட்டாக பொருந்தி வருகிறது. எழுத்தாளன் கணேஸ், இந்திரன் — சஸி தம்பதியினரின் அழைப்பை ஏற்று விருந்திற்கு அவர்களின் ஆடம்பரமான வீட்டுக்குச் செல்வதுடன் நாடகம் ஆரம்பமாகிறது.

எழுத்தாளனுக்கு தமது ஆடம்பரத்தைக் காட்டி பார் நீயும் எங்களைப்போல இருக்கலாம்; ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராக இருக்கலாம்; அதிகாரத்துடன் சேர்வது எவ்வளவு வசதியானது என்று புத்திமதி கூறுகிறார்கள். நாடக முடிவில் யார் உண்மையில் பரிதாபமானவர்கள் என்று தெரிய வருகிறது. நாடக ஆக்க உத்தியில் விசனங்கள் அமைந்த விதம் தம்பதிகள் இருவரும் ஒரே குரலில் பேசுவது போல் மாறி மாறி சரமாரியாக எழுத்தாள நண்பனை தாக்குவது போல, மழை பெய்து ஓய்ந்துவிட்டு திரும்பவும் உக்கிரத்துடன் தாக்கி ...... இப்படி விட்டு விட்டு ...... ஒரு லயத்துடன் மிக இறுக்கமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இந்திரனாக மனோ மனுவேற்பிள்ளையும், மனைவி சஸியாக ஆனந்தராணியும் சிறப்பாக நடித்து பாராட்டுப் பெற்றனர். எழுத்தாளனாக அதிகம் பேசாமலே பார்வையாளர்களை தன்வசப்படுத்தும் கிருஷ்ணராஜாவின் நடிப்பும் மெச்சப்பட்டது.

மேற்கு நாட்டு வாழ்க்கை முறையை நன்குணர்த்திய இந்தநாடகம் கலாசாரத்தை இழந்து வரும் நம்மவர் பலருக்கு ஒருபாடமாகவும் அமையும் என்பது உண்மை. மொத்தமாக சொல்வதனால் மேடையேறிய நாடகங்கள் அனைத்தும் பிரமாதம். ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாகியது எனலாம். அத்துடன் முதியோர் நாடகங்கள் தொடர்ந்தும் மேடையேற உரியவர்கள் ஆவன செய்வார்களா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

### புதிய பாடநூல்கள் தாமதமின்றிக் கிடைக்குமா?

புதிய கல்விச் சீரதிருத்தத்தின்படி ஆறாம் தரம் ஒன்பதாம் தரம் ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சுற்றாடற்கல்வி, விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் போன்ற புதிய பாடங்கள் இவ்வருடம் அறிமுகப்படுத்தப்பட்டமை யாவரும் அறிந்ததே. ஆனால் பாடசாலை தொடங்கி ஏறக்குறைய ஆறு மாதங்களின் பின்பே யாழ். மாணவர்களுக்கு மேற்படி புதிய பாட நூல்கள் வழங்கப்பட்டன. அத்துடன் ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை முடிவுற்ற தற்போதைய நிலையிலும் மேற்படி புதிய பாடங்கள் தொடர்பான ஆசிரியர் கைந்நூல்கள் யாழ். ஆசிரியர்களுக்கு இது வரை வழங்கப்படவில்லை. எனவே புதிய பாடத்திட்டம் தொடர்பான பூரண விளக்கம் அற்ற நிலையில் கற்பிக்க வேண்டியதோர் இக்கட்டான நிலை யாழ் ஆசிரியர் சமூகத்துக்கு ஏற்பட்டது.

அத்துடன் வினைத்திறன் மிக்க கற்பித்தல் பணியை மேற்கொள்வதற்கான பாட ஆயத்தம் செய்வதற்கு ஆசிரியர் கைந்நூல்கள் மிகவும் அவசியமானவை என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் எதுவும் இருக்க முடியாது.

இந்நிலையில் புதிய பாடத்திட்டப் புத்தகங்கள் யாழ். மாணவர்களுக்கு நீண்டகால தாமதத்தின் பின்பே கிடைத்தமை காரணமாக யாழ் கல்விச் சமூகமானது கொழும்பில் உள்ள சில தனியார் புத்தக வெளியீட்டு நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட பாடப் பயிற்சிப் புத்தகங்களிலேயே முழுமையாகத் தங்கியிருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இதே போன்று எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தொடங்குகின்ற புதிய கல்வியாண்டில் தரம் ஏழு தரம் பத்து ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்குப் புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது. ஆகவே இம்முறையாவது புதிய கல்வித் திட்டம் தொடர்பான பாடப் புத்தகங்கள், ஆசிரியர் கைந்நூல்கள் போன்றன யாழ். மாவட்டத்தில் தாமதமின்றிக் கிடைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியம் ஆகும்.

பொறுப்பானவர்கள் கவனிப்பார்களா?

கோப்பாய் வடக்கு. ஓர் ஆசிரியர்

### தண்ணீர்ப் பிரச்சினை தீர்வது எப்போது?

பருத்தித்துறை வீதிக்கு கிழக்கில்உள்ள இருபாலை தோறபிட்டி, குத்துனி, ஆனந்தபுரம், வி.எச்.லேன், கலைமணி வாசிகசாலை ஆகிய பகுதிகளில் நீர் உவர்த்தன்மை கொண்டது. எனவே இப் பகுதிகளில் உள்ள மக்கள் வீதியின் மேற்குப் புறத்தேயுள்ள வீடுகள் மற்றும் கோயில்களில் தான் தண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியும். பொழுதுபட்டால் தண்ணீர் எடுப்பது சிரமம். ஏனெனில் இராணுவத்தினருக்கு பயப்படவேண்டிய நிலை ஒருபுறம் வீடுகளில் தண்ணீர் அள்ள விடமாட்டார்கள் என்பது மறுபுறம்

இதனால் இங்குள்ள மக்கள் தண்ணீருக்கு அலையவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது அத்துடன் இம் மக்களில் அதிகமானோர் கூலித் தொழிலாளிகள். அன்றாடம் தொழில்செய்துவிட்டு வந்துதான் தண்ணீர் எடுக்கவேண்டி வரும் மக்கள்படும் கஷ்டத்தைக் கவனத்தில் கொண்டு மக்கள் நலன்காக்கும் பிரிவு ஒரு தண்ணீர்த் திட்ட அறிக்கையை உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்தது. அதன்படி நீர் வடிகால் வழங்கல் சபையினர் வந்து கிணறு வெட்டுவதற்கு பிரதேச சபையில் இருந்து காணியும் பெறப்பட்டு நிலையமும் எடுக்கப்பட்டது.

ஆனால் இன்று வரை கிணறு வெட்டுவதற்கான எந்த ஓர் ஆயத்தமோ செயற்பாடுகளோ நடைபெற்றதாக இல்லை. நீர் வடிகால் வழங்கல் சபை வந்தபோது இவ்வூர் மக்கள் தமக்குத் தண்ணீர் கிடைக்கப் போகின்றது என்ற சந்தோஷத்தில் ஆர்வத்துடன் சகல உதவிகளையும் செய்தார்கள். ஆனால் உதவி செய்து ஏமாந்தது தான் மிச்சமே தவிர தண்ணீர் வந்தபாடில்லை.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் வீதிக்கு கிழக்குப் பக்கத்தில் இருக்கும் ஆயிரம் குடும்பங்கள் பயனடைவார்கள். ஆகையால் இத் திட்டத்துக்கு என்ன நடந்தது? இதற்கு யார் பொறுப்பு?

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

கோப்பாய். சி. குணரத்தினம்.

# வாக்குகள் பிளவு ..


(3 ஆம்பக்கத் தொடர்)

தேர்தலைப் பகிஸ்கரிக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை ஏற்கும் நிலையில் பெரும்பாலானவர்கள் இல்லை. அது தமக்குப் பின்னால் பெரும் சங்கடங்களை ஏற்படுத்தும் என்ற அச்சம் அவர்களிடையே உள்ளது. ஆனால் வாக்குச்சீட்டுகளைச் செல்லுபடியற்றதாக்கலாம் என்ற கருத்து ஒரு சிலரிடம் நிலவுகிறது.

அமைச்சு ஏ. எச். எம். பௌசி தமிழ் மக்களின் அபிமானம் பெற்றவர். அவர்களுக்காக நன்கு சேவை புரிந்து வருகிறார். ஆனால் இவருடைய இச் செல்வாக்கு வாக்கு வங்கியைப் பெருக்க உதவுமா என்பது கேள்விக் குறிபாகவே உள்ளது.

இவற்றை மொத்தமாக ஆராயும்போது வாக்குகள் சிதறக் கூடும் என்பது தெளிவாகிறது. இதன் பிரதிபலனாக முக்கிய கட்சிகளாகிய பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஐ. தே. கவுக்கும் போதியளவு வாக்குகள் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. அதாவது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற ஒரு வேட்பாளர் 50 வீதத்துக்கு மேல் பெற வேண்டும். இது சாத்தியமாகாது என்றே தோன்றுகிறது. ★

# முதலாம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு



சென்ற 28 – 12 – 98 இல் சிவபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## கைலாசபிள்ளை கனகரத்தினம்

(சின்னராசா-ஆசாரியார்)

அவர்களது முதலாம் ஆண்டு நினைவுநாள் இன்று [19–12–99] ஞாயிற்றுக்கிழமை பகல் 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வுகளுக்கு தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், பதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

[71799]

## சிறப்புத்தரத்துக்கு பதவி உயர்வு

நெடுந்தீவு, டிசெ. 19

யாழ்ப்பாணம், மாநகராட்சி மன்ற பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் இ. இரத்தினசிங்கம், தீவக வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஆ. ஆனந்தராசா ஆகியோர் திறமை அடிப்படையில் பதவி உயர்த்துதலின் மூலம் தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் சேவைகளின் அதி சிறப்புத் தரத்திற்கு நியமித்தலுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

வடக்கு — கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு இதனை அறிவித்துள்ளது.

இப்பரீட்சையில் இவர்கள் இருவர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். இப்பதவி உயர்வுகள் 1995ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும்.

(ஐ – 111)

## பாடசாலைக்கு தளபாடம்

வேலணை, டிசெ. 19

காரைநகர் மருதபுரம் பகுதிப் பாலர் பாடசாலைக்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியினரின் நிதியிலிருந்து வழங்கப்பட்ட இத் தளபாடங்களை தீவக அமைப்பாளர் ந. மதன்ராஜா பாலர் பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்தார். (ஐ-167)

## நீர் விநியோகம் சீர் செய்யப்படும்

நெடுந்தீவு, டிசெ. 19

நெடுந்தீவு குழாய் நீர் விநியோகத்திட்டத்தில் வெடிப்புக்குள்ளாகி இருக்கும் பிரதான விநியோகக் குழாய்கள் விரைவில் சீர் செய்யப்படும்.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் இதற்கான உதவிகளை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-111)


# ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

SVF

★ எம்மிடம் 01 – 12 – 99 வரை ஒப்படைத்த படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்து விட்டன.

★ எதிர்வரும் 24 – 12 – 99 இங்கிருந்து கொழும்பிற்கு படச்சுருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

★ எமது இல்லத்தில் தொலைத் தொடர்பு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| உள்நாட்டுக் கட்டணம் | 5/- |
| உள்வரும் கட்டணம் | 3/- |
| சர்வதேசக் கட்டணம் | 100/- |

**உபயகதிர்காமம்**

புலோலி தெற்கு, புலோலி.

**07 – 21272**

[71844]



# வாக்காளர் கவனத்திற்கு

- அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்டு வரும் தேர்தல் இடாப்பு பதிவு அட்டைகள் இதுவரை உங்களுக்கு கிடைக்காதிருந்தால் பதற்றமடையாமல் உங்கள் வீட்டிற்கு சமீபமாகவுள்ள வாக்குச் சாவடிக்குச் சென்று உங்களது பெயரையும் குடும்ப விவரங்களையும் தெரியப்படுத்தவும். அங்குள்ள பதிவேட்டில் உங்கள் பெயர் காணப்படின் உங்களை வாக்களிக்க அனுமதிப்பார்கள். கடந்த கால தேர்தல்களில் நீங்கள் வாக்களித்திருந்தால் உங்கள் பெயர் தேர்தல்இடாப்பில் உள்ளதென்பது நிருபணம்.
- வாக்கு மோசடிகள் நடைபெறாமலிருக்க தேர்தல் இடாப்பு பதிவு அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் நேரகாலத்துடன் வாக்களிக்கச் செல்வது பயனளிக்கும். இல்லையெனில் யாராவது உங்கள் வாக்குகளை துஷ்பிரயோகம் செய்யலாம்.

**Alliance for Justice**

(71813)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை - கரவெட்டி

# மீள் கேள்வி, அறிவித்தல் - 2000

கேள்விப் படிவங்கள் வழங்கல் :- 27-12-99 நண்பகல் 12.30 மணி வரை
கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் :- 28-12-99 முற்பகல் 10.30 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் நேரம் :- 28-12-99 முற்பகல் 11.00 மணி

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| சந்தைகள்/ இறைச்சிக்கடைகள்/ பாதுகாப்பு நிலையங்கள் | கேள்விப் பத்திரப் பணம் ரூபா | கேள்வி வைப்பு ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா |
|---|---|---|---|
| 1. நெல்லியடி மீன் சந்தை | 150/- | 1000/- | 60000/- |
| 2. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல 03 | 100/- | 500/- | 15000/- |
| 3. கோயிற் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 1000/- | 40000/- |
| 4. நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை இல. 02 | 150/- | 3000/- | 125000/- |
| 5. நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை இல. 3 | 150/- | 3000/- | 125000/- |
| 6. நெல்லியடி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 150/- | 1000/- | 40000/- |
| 7. உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 6000/- |
| 8. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 26400/- |
| 9. துன்னாலை வடக்குச் சந்தை | 100/- | 500/- | 1650/- |
| 10. அல்வாய் தெற்குச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 24000/- |

சி: பசுபதி
செயலாளர்.

வடமராட்சி தெ மே. பி. சபை,
கரவெட்டி.
16–12–99

உ

## நயினாதீவு இரட்டங்காலி ஸ்ரீ முருகன் கோயில் அறங்காவலர் சபை

# புதிய நிர்வாக சபைத் தெரிவு

நயினாதீவு இரட்டங்காலி ஸ்ரீ முருகன் கோயில் பொதுக்கூட்டம் 10 – 11 – 1999 புதன்கிழமை மாலை 4. 30 மணியளவில் கோயிலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை பதினைந்து பேர் கொண்டதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக திரு. கு. சபாநாதன் அவர்களும்
செயலாளராக திரு. சி. உமாகரன் அவர்களும்
பொருளாளராக திரு. பெ. திருநாவுக்கரசு அவர்களும்
தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களின் விவரம் வருமாறு:

- திரு. வை. சுப்பிரமணியம்
- திரு. க. உருத்திரகுமாரன்
- திரு. அ. தவேஸ்வரன்
- திரு. சோ. குமரகுரு
- திரு. நா. திருச்செல்வம்
- திரு. பு திலீப்குமார்
- திரு. ச. ஸ்ரீதரன்
- திரு. வீ. இராசலிங்கம்
- திரு. ந. மோகனரூபன்
- திரு. கா. சிவகடாச்சம்
- திரு. பொ. அன்பரசன்
- திருமதி ப. ஈஸ்வரன்

இறை பணியில்

தலைவர். செயலாளர்.

இரட்டங்காலி முருகன் கோயில்,
நயினாதீவு.

(71850)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தலைக் கண்காணிக்க மதத்தலைவர்களின் விசேடகுழு

வடமேல் மாகாணசபைத் தேர்தல்களின் போது நடைபெற்ற ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் மீண்டும் நடைபெறாமல் இருக்கும் பொருட்டு இம்முறை தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக வடமேல் மாகாண பிரதான சங்கநாயகர். வணகட்டுமுலுவே சுமண ரதன தேரர் தலைமையில் அனைத்து மதத்தலைவர்களையும் உள்ளடக்கிய குழுவொன்று ஜனாதிபதித் தேர்தலை அவதானிக்க உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பிரதான சங்கநாயகர் மேற்கொண்டுள்ளார்.

வடமேல் மாகாணசபைத் தேர்தலின் போது வாரியப்பொலை பகுதியில் தற்போதைய வடமேல் மாகாண முதல்வர் எஸ். பி. நாவின்னவின் ஆதரவாளர்கள் பெண் ஒருவரை துகிலுரியச் செய்த சம்பவத்தின் பின்னர், இது போன்ற செயல்கள் மேலும் நடைபெறக் கூடாது என்ற நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை—

தேர்தல் காலத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் ஐ.தே.கவின் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து வருகின்றனர் இச்சம்பவங்கள் தொடர்பாக பொலீஸில்முறையிட்டும் இதுவரை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனச்சுட்டிக்காட்டப்படுகிறது

## சங்கீத சபைப் பரீட்சை முடிவுகள்

வட இலங்கை சங்கீத சபையினால் இவ்வருடம் (99) நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சங்கீதசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பரீட்சைக்கு 12 ஆயிரத்து 500 பேர் தோற்றிய போதிலும் 9 ஆயிரத்து 250 பேரே சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ்களே தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஐ-10)

# மக்கள் நலன் சார்ந்த மாற்று அரசியல் சக்தியை உருவாக்குக

## புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 19

இன, மத வர்க்க ஒடுக்குமுறைக்குள்ளாகும் தமிழ். சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒருவரது உரிமையை ஒருவர் மதித்து உறுதியான, மக்கள் நலன் சார்ந்த மாற்று அரசியல் சக்தியை கட்டியெழுப்பவும், ஒரு புதிய அரசியல் பண்பாட்டை வளர்த்தெடுக்கவும் முன்வர வேண்டும்.

புதிய ஜனதாக்கட்சி விடுத்த ஓர் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலை ஒட்டி வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ் மக்கள் மீதான யுத்தப் பிரகடனத்துடன் ஆரம்பமான யு என் பியின் பதினேழு ஆண்டுகால இருண்ட ஆட்சியை நீக்கி சமாதானத்தையும், அரசியல் தீர்வையும் ஏற்படுத்துவதாகக் கூறி பதவிக்கு வந்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசு, தலது ஐந்து ஆண்டு கால ஆட்சியில் யுத்தத்தை மேலும் விரிவாக்கி வடக்குக்கிழக்கை நிரந்தர யுத்த பூமி ஆக்கியுள்ளது.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்குஅரைகுறைத்தீர்வை முன்வைத்த பொதுசன ஐக்கிய முன்னணியும் 3அவ் அரைகுறைத்தீர்வையே ஏற்க மறுத்த யூ. என். பியும் சமாதானத்தை கோஷமாக வைத்து அதிகாரப் போட்டியில் இறங்கியுள்ளன. ஐம்பது ஆண்டுகால இனத்துவ அரசியல் போராக மாறி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்டு தொடரும் போதும், இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை சிங்கள மக்கள் முன்வைத்து பிரசாரப் படுத்தாத மக்கள் விடுதலை முன்னணியும் தேர்தலில் நிற்கின்றது.

இன, மத, வர்க்க ஒடுக்குமுறைக்குள்ளாகும் தமிழ். சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒருவரது உரிமையை ஒருவர் மதித்து உறுதியான மக்கள் நலன் சார்ந்த மாற்று அரசியல் சக்தியை கட்டியெழுப்பும், ஒரு புதிய அரசியல் பண்பாட்டை வளர்த்தெடுக்கவும் முன்வர வேண்டும் என புதிய ஜனநாயகக்கட்சி வேண்டுகிறது.

இத்தகைய மக்கள் நலன் சார்ந்த கொள்கைகளை முன்னெடுக்க தேசிய ஜனநாயக வேலைத் திட்டத்தை முன்வைத்து தோழர் வாசுதேவா நாணயக்காரா அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில், போட்டியிடுகின்றார். இவர் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்துக்கெதிராகவும் சுயநிர்ணய அடிப்படையிலான அரசியல் தீர்வுக்காகவும் குரல் கொடுத்து வந்தவர். உலகமயமாதல், திறந்த பொருளாதாரம், தனியார் மயம் என்பவற்றிற்கெதிரான கருத்தியலை முன்னெடுத்து வருபவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

/ஐ/

## சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

கல்வியங்காட்டில் உள்ள நல்லூர் பொதுச் சந்தைப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சந்தைப் பகுதியில் சேரும் கழிவுகள் உடனுக்குடன் அகற்றப்படுவதில்லை என்றும் இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது [ஐ-180]

# மரண அறிவித்தல்கள்

## மருதடியர்ன் நாகராசா

(ஸ்ரீலங்கா ரெலிக்கொம், யாழ்ப்பாணம்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் புங்கன் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மருதடியான் அன்னப்பிள்ளை அவர்களின் அன்பு மகனான நாகராசா 17–12–1999 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், தயாளினி, தயாளன், தயாகரன், தயாறூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாதேவன், பதமநாதன் (வவுனியா), சிவகாமசுந்தரி (கொழும்புத்துறை), மகேஸ்வரன் (ஜேர்மனி), வாலாம்பிகை (வன்னி), மனோகரன் (புங்கங்குளம்), ஞானாம்பிகை (இந்தியா), கனகாம்பிகை (வன்னி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகரத்தினத்தின் மருமகனும் லோகநாதனின் (ஜேர்மனி) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18-12-99) பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
மனைவி, பிள்ளைகள்.

கந்தரோடை, சுன்னாகம். (71864)

## சிவசுந்தரம் வனசாட்சி

பருத்தித்துறை வீ. மு, வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவசுந்தரம் வனசாட்சி 16-12-99 அன்று காலமானார்.

இவரின் இறுதிக் கிரியைகள் 17-12-99 வெள்ளிக் கிழமை நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
சிவபாலசுந்தரம் (பபி)
(மகன்)

வீ.மு. வீதி,
பருத்தித்துறை. (71863)

## திருமதி அன்னம்மா செல்லத்துரை

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி அன்னம்மா செல்லத்துரை 15-12-99 அன்று காலமானார்.

அன்னார் கார்த்திகேசு செல்லத்துரையின் அன்பு மனைவியும், அருளானந்தம் (ஹொலண்ட்), யோகராணி, ஜெயராணி, சிவானந்தராசா (பிரான்ஸ், பவானந்தராசா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவராணி (கொழும்பு), முத்துக்குமாரசாமி (ஆசிரியர் — உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), செல்வானந்தராசா, பவானி ஆகியோரின் அன்பு மாமியாரும், வைடூரிகா, வெங்கடர்சிகன், ஜிவாஜனன், சுதன், வேதிகா, யுகந்தரா, கஜவதனா, கருணாலயன் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், மற்றும் அம்பலவாணர், காலஞ்சென்ற நல்லம்மா, இராசம்மா, கந்தையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சின்னம்மா, காலஞ்சென்ற கந்தையா, ஆறுமுகம், செல்லம்மா, சின்னத்துரை, பூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-12-99 இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்!
கா. செல்லத்துரை
(கணவன்)
செ. அருளானந்தம்
(மகன்) (71866)

இணுவில் மேற்கு.
இணுவில்.

# யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

1. பதவி:
   விற்பனை உதவியாளர் (தற்காலிகம்)
2. சம்பளம்: கடமையாற்றும் நாளொன்றுக்கு ரூபா 90 மொத்த வேதனமாக வழங்கப்படும்.
3. தகைமைகள்:
   கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் சாதாரணதரம் அல்லது க. பொ. த. (சா/த) பரீட்சையில் எண்கணிதம் / வர்த்தக கணிதம்/ கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
4. வயது: விண்ணப்பதாரிகள் 28-12-99ஆம் திகதி 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஏனைய விவரங்கள்:
   சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களை மாத்திரம் பூர்த்தி செய்து 28-12-99 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.


பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சி/10244)

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் உடன் தொடர்பு கொண்டு விலை விவரத்தை 24-12-99 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட
அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
(சி/10245)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முத்துச்சாமி மகாலிங்கம்

(உரிமையாளர், வின்சிலோஸ் கராச்
149, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்)

அன்னை மடியில் 24 - 03 - 1944 | ஆண்டவன் அடியில் 21 - 12 - 1996

திதி:- 19 - 12 - 1999

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும்
எங்களை வழிநடத்தி வாழ வைத்த அன்புத் தெய்வமே!
சுவர்க்கவாயில் திருநாளன்று எம்மையெல்லாம் பிரிந்து
கண்ணன் திருவடியில் சென்று விட்டீர்கள்!
உங்களை என்றென்றும் நாம் மறவோம்!

உங்கள் ஆத்ம சாந்திக்கு எம் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி அஞ்சலி செலுத்துகின்றோம்.

— குடும்பத்தினர்.

53, 55, பெரியதம்பிரான் கோயிலடி,
வண். மேற்கு,
யாழ்ப்பாணம். [71870]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட GOLD FISH மீன்கள் விற்பனைக்குண்டு. முகவரி: 131 (251), அரசடி றோட். கந்தர்மடம்சந்தி அருகில், யாழ்ப்பாணம். (71857)

### தவறிவிட்டது

ஆடியபாதம் வீதி, கொக்குவில்மேற்கு என்னும் முகவரியைச்சேர்ந்த சிசுபாலன் சிவச்செல்வன் என்பவரது விசேட அ. அட்டை, தேசிய அ. அட்டை பெறுவதற்கு வழங்கப்பட்ட சிட்டை இரண்டும் 16-12-99இல் கொக்குவில் சந்திக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் கே கே எஸ் வீதி, கொக்குவில் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் (71862)

10-12-99 அன்று எனது விசேடஅ.அ.இல.091009721 சாவகச்சேரியில் தவறிவிட்டது தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் யோ. சிவானந்தராசா, குடும்பநல சுகாதார உத்தியோகத்தர், சுகாதாரக்கந்தோர், சாவகச்சேரியில் தொடர்பு கொள்ளவும். (சி/10235)

துரைச்சாமிக் குருக்கள் குமாரசுவாமி என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகளும் (450261610V -0907019173) குமாரசுவாமி செங்காதேவி என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகளும் (507033758 V — 0907020343) யாழ்ப்பாணத்துக்கும் இளவாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சித்திரமேழி வீதி, இளவாலை என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (71849)

முத்துக்குமாரு பிள்ளையினார் ஆகிய எனது தேசிய, விசேட அடையாளஅட்டைகள் (512120300 V) யாழ்ப்பாணத்துக்கும் திருநெல்வேலி சந்தைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 15 ஆம் கட்டை, உடுப்பிட்டி தெற்கு என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (71841)

### கூட்டம் ஒத்திவைப்பு

அரியாலை, டிசெ. 19

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகச் சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

இந்தப் பொதுக்கூட்டம் நேற்று சனிக்கிழமை நடைபெற இருந்தது. (ஐ-17)

சி

7 ?

(சி/10183)

குரக்கன் தேவை

அண்ணா பாம்

ஸ்ரேசன் றோட்,
மருதனார்மடம்.

(சி/10238)

### வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் மூன்று அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: அருள் ஜெயேந்திரன், 'குகஸ்தான்', ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (71836)

### சித்தி விநாயகர் சோதிடம்

சாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, சகல யந்திரங்களுக்கும் கிரகதோஷ நிவாரணத்திற்கும் நாடுங்கள் கொழும்பில் 22வருட சோதிட அனுபவம் பெற்ற விஸ்வப் பிரம்மஸ்ரீ மா. தங்கவேல் 9, டச்சு வீதி, சாவகச்சேரி, வலிகாமம் வடமராட்சி அன்பர்கள் முன் அறிவித்து வந்தால் சிரமமிராது. ஞாயிறு விடுமுறை. (71776)

### இறைச்சிக்கோழி

(Broiler) சேவல் பேட்டுக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீதியோசென்ரர்வளவு) முத்திரைச் சந்தையடி" நல்லூர். (71806)

இறைச்சிக்கோழி [Broilar] கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். [சின்னக்கடை அருகில்.] [71761]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: இல, 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (71851)

## அறிவித்தல்

யாழ். மாவட்ட
சிகை ஒப்பனையாளர் சங்கம்
இல. 30, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

எதிர்வரும் நத்தார் தினத்தை முன்னிட்டு அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களும் (22-12-99) புதன்கிழமை திறந்து (25-12-99) சனிக்கிழமை மூடு மாறும் புதுவருடத்தை முன்னிட்டு (29-12-99) புதன்கிழமை அனைத்து நிலையங்களையும் திறக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி!

சி. பாலச்சந்திரன்
செயலாளர்

(71860)

## கிளைக்கட்டடம் அமைத்தலுக்கு கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் பொலிகண்டிக்கிளைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு கட்டட ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் அலுவலக நாள்களில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி 31-12-99 ஆகும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர்
பரு. பல நோ. கூ. சங்கம்,
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

[சி/10241]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 — 09 — 1918

உதிர்வு 19 — 12 — 1997

திருமதி
**அக்னெஸ் ஞானப்பிரகாசம்**

ஈராண்டுகள் ஓடி மறைந்தாலும் நீராண்ட எம் நெஞ்ச நினைவுகள் மறைந்திடுமா? எங்கள் பண்புமிகு தெய்வமே! நேசமுடன் எம்மை வளர்த்தெடுத்து நெறிகளையும் காட்டுவித்த எங்கள் அன்பின் தாயே! உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தாழையடி. (71866)

## அறிவித்தல்

### யாழ். மாவட்ட கரபந்தாட்ட சங்கம்
### ஆண்டுப் பொதுக் கூட்டம் 1999

காலம்:— 22-12-99 புதன்கிழமை
நேரம்:— காலை 10.00 மணி
இடம் :— கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபம்.

இணைந்த கழகங்களின் தலைவர், செயலாளர்கள் ஆகியோர் பங்கு கொண்டு புதிய ஆண்டுக்கான நிர்வாக சபையைத் தெரிவு செய்யவும்.

Capt. D. A. M. குணசிங்கம்
தலைவர்

க. ஏகாம்பரம்
செயலாளர்

S. சுதாகர்
பொருளாளர்.

யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கம்.

18-12-99 (10242)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 23 — 03 — 1981

மறைவு 17 — 11 — 1999

எங்கள் குடும்ப முதல் முத்து
**சுந்தரலிங்கம் சிவோத்தமன்**
(2000 ஆண்டு உயிரியல் மாணவன், ஹாட்லிக் கல்லூரி)

இவரின் எதிர்பாராத அகால மரணத்தையிட்டு எங்கள் துக்கத்தில் பங்குகொண்ட எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 1999-12-19 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சுந்தரலிங்கம் குடும்பத்தினர்.

வாரியத்தனை,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(சி/10239)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹா

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 06 — 07 — 1929

சிவபதம்: 30 — 12 — 1998

அமரர்
**சுப்பிரமணியம் நாராயணன் ஆச்சாரி**

திதி: 19-12-1999

எம்மையெல்லாம் சீராட்டித் தாலாட்டிப் பாசமாய் வளர்த்தெடுத்து இந்த வையகத்தில் தலைநிமிர்ந்து வாழவைத்த எம் கண்ணுக்கினிய அப்பாவே! இனி எப்போது உங்கள் அன்பு முகம் காண்போம்?

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

தகவல்:
நா. பாலசுப்பிரமணியம் (ராசா),
துர்க்கா நகைத் தொழிலகம்,
Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(71859)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் தேர்தல் சுதந்திரமாக நடத்தப்படும்

## பதில் தேர்தல் ஆணையாளர் நீதிமன்றுக்குத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

ஜனாதிபதித் தேர்தல் யாழ். மாவட்டத்தில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தப்படும் என்று பதில் தேர்தல் ஆணையாளர் டீ.எம் பீ.பீ.தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதியில் ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாக நடத்த முடியாது எனத் தெரிவித்து ரி. பரமநாதன் என்பவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தமை தெரிந்ததே.

இந்த மனுமீதான விசாரணை மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்ற போதே பதில் தேர்தல் ஆணையாளரின் மேற்கண்ட பதிலை அவரின் பிரதிநிதியான மேலதிக சொலிசிஸ்ட ஜெனரல் எம். மர்சூர் அங்கு தெரிவித்தார்.

நேர்மையாகவும் சுதந்திரமாகவும் தேர்தலை நடத்தும் வகையில் தேவையான சுற்றறிக்கைகள் யாழ். தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன அதேவேளை ஆறு இலட்சத்து 25 ஆயிரம் வாக்குச் சீட்டுக்கள் குடாநாட்டில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. வாக்குப் பதிவு செய்யப்படாத வாக்குச் சீட்டுக்கள் தேர்தல் முடிந்ததும் முத்திரையிடப்பட்டு கொழும்புக்கு எடுத்து வரப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார் என அவரின் பிரதிநிதியான மேலதிக சொலிசிஸ்ட ஜெனரல் எம் மர்சூர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

பதில் தேர்தல் ஆணையாளரின் பதில்மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து மனுதாரரான ரி. பரமநாதன் தனது மனுவை வாபஸ் பெற்றார்.

(ஐ-7)

### வாக்கு எண்ணும் பணிக்காக

# யாழ். செயலகத்துக்கு விசேட மின் இணைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

எதிர்வரும் டிசெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி யாழ். செயலகத்தில் மேலதிகமான மின் இணைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

வாக்களிப்பின் பின்னர் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும் சந்தர்ப்பத்தில் மின் தடங்கல் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே புதிய மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இணைப்பில் ஜெனரேட்டர் மூலம் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகவும்—

வாக்குகள் எண்ணப்படும் போது இடையில் மின்தடங்கல் ஏற்பட்டாலும் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் தொடர்ச்சியாக விநியோகிக்கப்படும் என்றும் —

அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-9)

# பாலருக்கான கல்விமுறை ஒழுங்கமைக்கப்பட வேண்டும்

## பரிசளிப்பு விழாவில் உரை

கைதடி, டிசெ. 19

தற்பொழுது நமது நாட்டில் நடைமுறையில் உள்ள முன்பள்ளிகளில் கல்வி கற்பித்தல் முறை ஒரே சீராக அமையாது பல வேறுபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. பாலர் முன்பள்ளிக் கல்வியின் முக்கியம் இன்று உணரப்பட்டு, அதனைச்சீரமைக்கும் பொறுப்பு மாகாண நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைதடி மேற்கு பராசக்தி பாலர் பகல் இல்ல வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி உரையாற்றுகையில் தென்மராட்சிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திருமதி சுபத்திரா தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தரம் ஒன்றில் வயது வித்தியாசமான பிள்ளைகள் சேர்க்கப்படுவதால் ஆசிரியர்கள் கற்பித்தலில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இத்தகைய நிலைமைக்கு பெற்றோரின் அறிவின்மையும் ஏழ்மையும் காரணமாகவுள்ளன

பாலர்களின் திறமைகளை வெளிப்படுத்தி ஊக்குவிக்க பாலர் முன் கல்விக் கற்பித்தல் முறை நாடு முழுவதும் ஒரே சீராக ஒழுங்கமைக்கப்பட வேண்டும்—என்றார்.

பாலர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

[ஐ—109]


## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்
திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களின்
அன்புப் பாரியார்
**தேவராணி**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
[சி/10248]


# தையல் இயந்திரம் அன்பளிப்பு

கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு பெண்களுக்கான தையல் பயிற்சிக்கென 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு தையல் இயந்திரங்களை வலி. கிழக்குப் பிரதேச சபை வழங்கியுள்ளது.

இந்தச் சங்கத்தினால் இப்பகுதியில் உள்ள பெண்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி நெறியின் தொடக்க விழாவின் போது நான்கு தையல் இயந்திரங்களும் தையல் உபகரணப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

(ஐ-180)

# பட்டதாரிகள் விவரம் பதிவு

யாழ். மாவட்டத்தில் இதுவரையில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் பதிவு செய்யாத அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு பட்டதாரிகள் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளின் விவரங்களை தேசிய வரவு செலவுத் திட்டப்பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கும் நோக்குடன் மேற்படி விவரங்கள் பதியப்படவுள்ளதாகச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

(ஐ-185)

# உதவி அத்தியட்சகர் உட்பட 5 சிறைக்காவலர் நியமனம்

நெல்லியடி, டிசெ. 19

வெலிக்கடைச் சிறைச்சாலையில் பணிபுரிந்து வந்த உதவி அத்தியட்சகர் ஒருவர் உட்பட ஐந்து சிறைச்சாலைக் காவலர்கள் யாழ். சிறைச்சாலைக்கு இடமாற்றலாகியுள்ளனர்.

சிறைச்சாலை தலைமைக் காரியாலய பணிப்பின் பேரில் மூன்று மாதகால விசேட கடமைக்காக இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெலிக்கடைச் சிறைச்சாலை உதவி அத்தியட்சகரான எம். குணரட்ண என்பவரும் நான்கு காவலர்களும் கடந்த 13 ஆம் திகதி முதல் தமது கடமையை இங்கு பொறுப்பேற்றுள்ளனர்.

(ஐ-109)

# சிறைச்சாலை காவலர் பதவி; 12 பேருக்கு நியமனக் கடிதம்

நெல்லியடி, டிசெ. 19

யாழ். மாவட்டத்தில் சிறைச்சாலை காவலர் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியவர்களுள் சுமார் 12 பேருக்கான நியமனக் கடிதங்கள் கடந்த 13 ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ். சிறைச்சாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இவர்களுக்கு அடுத்த மாதம் 2 ஆம் திகதி கொழும்பிலுள்ள தலைமையகத்தில் ஒரு மாத கால பயிற்சி நடைபெறவிருக்கின்றது. நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-199)

# அரச ஊழியர்களில் பலர் புள்ளடி இட்டு வாக்களிப்பு

வலி. மேற்கு, டிசெ. 19

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களித்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல அரச ஊழியர்கள் வாக்குச் சீட்டில் புள்ளடி இட்டே வாக்களித்துள்ளமை தெரியவந்துள்ளது.

வாக்களித்த பல அரச ஊழியர்கள் தாங்கள் புள்ளடி இட்டே வாக்களித்ததாக பின்னர் தெரிவித்தனர்.

தற்போதைய வாக்களிப்பு முறையில் புள்ளடி இடும்முறை இல்லை அவ்வாறு செலுத்தப்படும் வாக்குகள் செல்லுபடியற்றதாகவே கருதப்படும்.

தற்போதைய வாக்களிப்பு முறை இலக்கத் தெரிவு மூலமே வாக்கைச் செலுத்துவதாகும். நீண்ட பலகாலமாக தேர்தல்கள் ஒழுங்காக நடைபெறாமையினால வாக்களிப்பு முறையில் பரிச்சயமற்றவர்களாக குடாநாட்டு வாக்காளர்கள் உள்ளனர்.

(ஐ-175-86)

# வெள்ளி இரவு பெய்த மழையால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்

அரியாலை, டிசெ. 19

நேற்று முன்தினமிரவு பெய்த கடும்மழையினால யாழ். நகரை அண்டிய தாழ்ந்த பகுதிகளில் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கொழும்புத்துறை துலந்தைக்குளம், ஈச்சமோட்டையில் உள்ள மக்கி குளம் குண்டுக் குளம், பால் குளம், மறவன் குளம். போன்றவை நீரினால் நிரம்பி வீதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்துமழை பெய்ததால் இப்பகுதியை அண்டி வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது,

இதேசமயம் —

வலிகாமம் பகுதிகளில் தாழ்ந்த பகுதிகளில் உள்ள வயல் நிலங்களிலும் வெள்ளம் ஏற்பட்டிருப்பதால் நெற்பயிர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் சில இடங்களில் வீதியோரக் கால்வாய்கள் நிரம்பியதால் வெள்ளம் தேங்கி நிற்கிறது. (ஐ-17)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழையமாணவனும்
முன்னாள் வடமாநிலக் கல்வி அதிபதியுமாகிய
திரு. இரா, சுந்தரலிங்கம் அவர்களின்
பிரிய பத்தினி
**திருமதி தேவராணி சுந்தரலிங்கம்**
அவர்களின் பிரிவு குறித்து எமது அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.
(71896)



பேரினவாத யுத்தத்துக்கு எதிராக
சுயநிர்ணய உரிமைக்கான கருத்தியலை முன்னெடுக்க
ஜனாதிபதி வேட்பாளர்
**வாசுதேவ நாணயக்காரா அவர்களுக்கு**
வாக்களியுங்கள்

**புதிய ஜனநாயகக் கட்சி**

(71882)



1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு சிப்பாய்கள் நேற்று புலிகளால் விடுவிப்பு

கடந்த வாரம் வெற்றிலைக் கேணி கட்டைக்காட்டுப் பகுதிகளில் இடம்பெற்ற சமரின்போது புலிகளிடம் சரண் அடைந்த இரு இராணுவச் சிப்பாய்கள் நேற்று பல்லாவியில் வைத்து புலிகளால் விடுவிக்கப்பட்டனர்.

சண்டி கம்பளையைச் சேர்ந்த ரன் பண்டா சந்திர குமார (வயது 23), அநுராதபுரத்தைச்சேர்ந்த ஆரியரத்ன திஸநாயக்கா (வயது 22) ஆகிய சிப்பாய்களே அவர்களின் உறவினர்களிடம் சேர்ப்பிக்கப்படுவதற்காக புலிகளினால் விடுவிக்கப்பட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் நேற்று முறபகல் 11.25 மணியளவில் ஒப்படைக்கப்பட்டனர். (உ-5)

## வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்

ஷெ ஆலய விடயம் சம்பந்தமாக வலிமேற்கு பிரதேச செயலரின் அறிவிப்பை ஏற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்துக்கு 17-12-99 வெள்ளிக்கிழமை திரண்டு வருகை தந்து இந்த ஆலயத்தின் புனிதத் தன்மையையும், சைவ சமயத்தின் மேன்மையையும் அத்துடன் எமது ஆலயத்தில் மட்டும் அல்லாது வேறு எந்த ஓர் ஆலய வீதியிலும் விளையாட்டு மைதானம் அமைப்பதை தாம் விரும்பவில்லை என்பதை வலி. மேற்கு பிரதேச செயலர் திரு கா சந்திரராசா அவர்களுக்கும் யாழ் அரச அதிபரின் பிரதி நிதியாக வருகை தந்திருந்த யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கம் அவர்களுக்கும் மேற்படி விடயங்களை வலியுறுத்திக் கூறியதுடன் அதனை கடிதங்கள் மூலம் சமர்ப்பித்த ஆலய பரிபாலன சபைகள் தொண்டர் சபைகள், இந்து மாமன்றங்கள், மாதர் சங்கங்கள் மகளிர் அமைப்புக்கள், இந்து வாலிபர் சங்கங்கள், ஐக்கிய நடனய சங்கங்கள், விளையாட்டு கழகங்கள், சன சமூக நிலையங்கள் வர்த்தகப் பெருமக்கள், கலைஞர்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆலய வழிபடுவோருக்கும் மற்றும் வாகன வசதிகள் செய்து கொடுத்தவர்க்கு உரிமையாளர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை திறம்பட ஒடியோ, வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல எம் பெருமானிடத்தும் எம் பிராட்டியினிடத்தும் இருபா கடாட்சம் கிடைப்பதற்கு பிரார்த்திக்கின்றோம்.

''அன்னையின் அருள் மகத்தானது''

செயலாளர்,
பரிபாலனசபையும் தொண்டர்சபையும்.

(71871)

## மரண அறிவித்தல்

### திருமதி தேவராணி சுந்தரலிங்கம்

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தேவராணி சுந்தரலிங்கம் அவர்கள் 15-12-99 புதனன்று இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் முன்னாள் வடமாநிலக் கல்விப்பணிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும் வடகிழக்கு பரீட்சை ஆணையாளருமான இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனையும் வைத்திய கலாநிதி சுதர்சன் (வவுனியா அரசினர் ஆதார வைத்தியசாலை) திருமதி செ. சுபாஷினி (Botswana) ஆகியோரின் அருமைத் தாயாரும் திருமதி இரத்தினேஸ்வரி சுதர்சன், திரு மு. செல்வவிநாயகன் (Botswana) ஆகியோரின் அன்பு மாமியும், பாலகன் அஜீத் செல்வவிநாயகனின் அருமை அம்மம்மாவும் காலஞ்சென்ற மலேயன் பென்சனர் தம்பிஐயா, திருமதி சின்னம்மா, தம்பிஐயா ஆகியோரின் மூத்த மகளும் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை பத்தினிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் திரு. தேவராசா (முன்னாள் பிரதி அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி), திருமதி கமலராணி உலகேஸ்வரன், திருமதி தர்மகுலராணி சண்முகலிங்கம், திருமதி அருந்தவராணி கதிர்காமநாதன், திரு த. இணுவை சுப்பிரமணியம் (அதிபர், கட்டுடை சைவப் பிரகாச வித்தியாசாலை), திரு த. செல்வானந்தராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பண்டிதர் இ இராசலிங்கம் வித்துவான், சைவப் புலவர் இ திருநாவுக்கரசு, இ. இராசரத்தினம் (ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர், ஆஸ்திரேலியா), திருமதி செல்லம்மா தம்பிஐயா, திரு. உலகேஸ்வரன் (பொறியியலாளர்), திரு சண்முகலிங்கம் (ஆசிரியர்), திரு. கதிர்காமநாதன் (ஆசிரியர்), திருமதி தே. அருந்ததி ஆனந்தகௌரி, திருமதி சு செல்வநாயகி, திருமதி செ ஜெயராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் இன்று (19-12-99) ஞாயிறு காலை 9.00 மணிக்குப் பொரளை ஜெயரத்தின மலர்ச் சாலையில் சைவாசார முறைப்படி இறுதிக் கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் காலை 10.00 மணிக்கு தகனக் கிரியைகள் நடைபெறும்.

தகவல்:-
இ. சுந்தரலிங்கம் (கணவர்)
Dr. சு. சுதர்சன் (மகன்)

89/14. Fussels Lane,
Colombo 6
T P No 586226.

(சி/10237)

## ஒளி விழாவும் பரிசளிப்பும்

புன்னாலைக் கட்டுவன், டிசெ. 19

ஏழாலை இசிதோர் றோ. க.த.க. பாடசாலை ஒளிவிழாவும் பரிசளிப்புவிழாவும்இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் க.ஜெயராசா தலைமையில் நடைபெறும்.

உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர். அ. தற்பரானந்தன் மற்றும் புனித இசிதோர் தேவாலய பங்குத் தந்தை ஆ. ஞானப் பிரகாசம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர்களான ஜே, சூசைதாஸ் ச. பொன்னம்பலம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர் (உ-133)

### பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவும் அவருக்கு அருகில் இருந்தோரும் குண்டு வெடிப்பு அதிர்ச்சியில் தூக்கி வீசப்பட்டனர் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோனும் அவர்களுள் ஒருவர்.

ஜனாதிபதி சிறு காயங்களுக்கு உள்ளானார் உடனடியாகக் கொழும்பு நவலோக ஆஸ்பத்திரிக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார்.

குண்டு வெடித்த இடத்தில் சடலங்கள் சிதறிக் கிடந்தன காயப்பட்டோர் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்தனர். கதிரைகள் வீசப்பட்டுக் கிடந்தன எனினும் கூட்ட மேடை பெரிய சேதத்துக்கு உள்ளாகவில்லை. (உ-5)


ஷண்ணின் இன்றைய வீடியோ CD வெளியீடுகள்

▶ பருவ வாசலிலே
▶ சேது
▶ A (ஏ)
(மர்மங்கள் நிறைந்த தமிழ் படம்)

ஷண்றெக்கோடிங் ஸ்பொட்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
(71897)



எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்!

- அழகர் சாமி
- டைம்

பிரமிட் CD வெளியீடுகள்!

- மனம் விரும்புதே உன்னை
- வாட்டாகுடிஇரணியன்
- சுந்தரி நீயும் சுந்தரன் நானும்
- அன்புள்ளரஜனிகாந்த்
- கப்பலோட்டியதமிழன்
- தேன் நிலவு
- குமரிப் பெண்
- ஜீன்ஸ்
- மாவீரன்
- வேலைக்காரன்

புதிய வீடியோ /ஓடியோ போஸ்ரர்களும் விற்பனைக்கு உண்டு.

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/10249)


## இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு 350 பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டனர்

வவுனியா, டிசெ. 19

வவுனியாவிலிருந்து நேற்று 350பேர் இராணுவக் கட்டுப் பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மன்னார் மற்றும் வவுனியாவில் தங்கியிருந்த—வன்னிப் பகுதியைச் சேர்ந்த—அரச ஊழியர்கள், நோயாளர்கள் மற்றும் பொதுமக்களே நேற்று வன்னிக்கு அனுப்பப் பட்டனர்.

இதேவேளை மன்னாரிலிருந்து இராணுவக் கட்டுப் பாடற்ற வன்னிப் பகுதிக்கு அனுப்பி வைப்பதற்கென நேற்று முன்தினம் வவுனியாவுக்கு அழைத்துவரப்பட்ட 300 வன்னிப் பகுதி மக்கள் கோழிக் கூடு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (உ-5-164)

### கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ். வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்களின் சட்டப்படி வேலை செய்யும்போராட்டம் நேற்று கைவிடப்பட்டது. (உ-6-15)

### தீவிரவாத...

(முதலாம் பக்கத் தொடர்)

திருப்பதால் —

சிங்களத் தீவிரவாத இயக்கங்கள் ஏதும் இக் குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கக் கூடும் என்றும் தெற்கில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரிகா, ரணில் இருவருமே புலிகளுடன் பேச்சு நடத்தும் திட்டத்தை வைத்திருப்பதால் இருவரையுமே தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என சிங்களத் தீவிரவாத இயக்கங்கள் பலஅண்மையில் கூறி வந்ததும் தீவிரவாதப் போக்கில் பல திரைமறைவு நடவடிக்கைகளை அவை ஆரம்பித்திருந்ததும் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது (உ)

### ஐ. தே. க...

(முதலாம் பக்கத் தொடர்)

என்பதும் —

அண்மையில் வன்னியில் அரசுப் படைகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுக்குக் காரணமாக — படைக்குள் சதி செய்யும் நபராக — இவர் இருந்திருக்கலாம் என அரசுத் தரப்பில் சந்தேகிக்கப்பட்டது என்பதும்—, குறிப்பிடத்தக்கவை.

மேற்படி ஜா-எல கூட்டத்தில் ஐ.தே கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ரணில் பங்குபற்றவில்லை.

தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாளான நேற்று இரவு அவர் கொழும்பு மருதானையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றினார். (உ)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

தம்)

இந்தப் பரீட்சையில் யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து தோற்றி நான்கு பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்ற அருளையா இளங்குமரன் கணிதப் பிரிவில் அகில இலங்கை ரீதியிலேயே முதலாவதாக வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை —

இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் இராணுவக் கட்டுப் பாடற்ற வன்னிப் பகுதியில் நேற்று வெளியாகின குடாநாட்டுக்கான பெறுபேறுகள் விமானம் மூலம் இன்று எடுத்துவரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது (உ)


MODERN LONDON STAR
Bank View, Chavakachcheri.

21-12-99 இல் ஆரம்பம்

நகரப் புகழுடன் மற்றுமோர் கிளை நிறுவனம் மட்டுவில் தெற்கு, வாகையடிச் சந்தி அருகில்
- கணனிப் பயிற்சிகள்
- தரம் 7 முதல் O/L வரையான வகுப்புகள்

★ வகுப்பொன்றுக்கு 30 அனுமதிகள் மட்டும். இறுதி ஆண்டில் பல விருதுகள் வழங்கப்படும்.

குறிப்பு:- தலைமை நிறுவன மாணவர்கள் இடம் பெயர்ந்திருப்பின் இக்கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

- இயக்குநர்
LS

(சி/10250)



ENJOY THE BENNIFITS OF NEW MILLENNIUM
SCHOLARSHIPS
C.I.M.A STAGE 1-100, STAGE 2-50
A/L 2C, பட்டதாரிகள்
A.A.T., I.A.B., O/L சித்தி
ஆங்கிலம் C, கணிதம் C
A.A.T - 100, I.A.B - 100

★ எமது விண்ணப்பப்படிவங்களில் 28-12-99 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.
★ சான்றிதழ்களைப் பாடசாலை அதிபர்கள் (பெறுபேற்று) உறுதிப்படுத்த வேண்டும்.
★ 50 நல்ல பெறுபேறுகளைஎடுத்த வறிய மாணவர்கள் புலமைப்பரிசில் அடிப்படையில் சேரலாம்.

(S.I.A.S) 358, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(71881)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org